# வீட்டு மருத்துவம்



மருத்துவர் முனைவர் சே.பிரேமா

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

T. 15815

# வீட்டு மருத்துவம்

மருத்துவர் முனைவர் சே.பிரேமா

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

ISBN : 81-7090-330-0

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனப் பதிப்புச்
சுழல் நிதியில் வெளியிடப்பட்டது.

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 270

திருவள்ளுவராண்டு 2035 ஐப்பசி-அக்டோபர் 2004

| | | |
|---|---|---|
| நூல் | : | வீட்டு மருத்துவம் |
| ஆசிரியர் | : | மருத்துவர் முனைவர் சே.பிரேமா |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | மருத்துவம் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2004 |
| பக்கம் | : | xvi + 100 = 116 |
| தாள் | : | டி.என்.பி.எல்.மேப்லித்தோ 16 Kg |
| அளவு | : | டெம்மி 1/8 |
| நூற்கட்டுமானம் | : | சாதாக்கட்டு |
| விலை | : | உரூ.44/- |
| படிகள் | : | 1000 |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர். |

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005 - இந்தியா

முனைவர் இ. சுந்தரமூர்த்தி

துணைவேந்தர்

# அணிந்துரை

மருத்துவ முறைகள் இன்று பல்வேறு வகைகளில் வளர்ந்துள்ளன. அறிவியல் தொழில் நுட்பத்தால் இன்று புதிய புதிய மருத்துவ முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. முனைவர் சே. பிரேமா அவர்கள் எழுதிய வீட்டு மருத்துவம் என்னும் இந்நூல் தமிழகத்தின் பழமையான மரபு சார்ந்த கை மருத்துவ முறையைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றது.

முன்னையோர் மூலிகையினுடைய பயன்பாட்டை நன்கு உணர்ந்து பல்வேறு நோய்களுக்கும் மூலிகையையே வீட்டு மருத்துவமாகப் பயன்படுத்தினர்.

பல்வேறு சூழலில் நோயுற்றோருக்கு வீட்டு மருத்துவ முறைகளை நம்முடைய முன்னோர் எப்படிப் பயன்படுத்தினர் என்பதை இந்நூலில் நூலாசிரியர் சிறப்புற விளக்கியுள்ளார். எளிதாகக் கிடைக்கும் மருத்துவப் பொருட்களைப் பயன்படுத்தி நோய்போக்கும் மருத்துவ நெறிமுறைகளை அனைவருக்கும் பயன்படும் வண்ணம் எளிய முறையில் இந்நூலில் தந்துள்ள முனைவர் சே. பிரேமா அவர்களுக்கு இனிய பாராட்டுதல்கள்.

நூலினை நன்முறையில் உருவாக்கிய பதிப்புத்துறையினருக்கும் இனிய பாராட்டுதல்கள்.

இ. சுந்தரமூர்த்தி

T 15815

# முன்னுரை

பழங்கால முறைப்படி வடமொழிப் பாடசாலைகளும் திண்ணைப் பள்ளிக்கூடங்களும் ஆங்காங்கே நடைபெற்று வந்தமை போலவே மருத்துவமும் சிலரின் குலத்தொழிலாக அமைந்து நடைபெற்று வந்தது. மருத்துவர்களே மருந்துகளையும் தயாரித்துக் கொள்வர்.

தமிழகத்தில் ஆங்கிலேயர் ஆட்சி நன்கு நிலை பெறத் தொடங்கிய காலகட்டத்தில்தான் மக்களுக்கு அரசு வாயிலாகக் கல்வியும் மருத்துவ நிலையங்களின் மூலமாக மருத்துவமும் வழங்க முற்பட்டது அரசாங்கம். கல்விதிட்டங்கள் ஆங்கிலேயோரால் வகுக்கப்பட்டது போன்றே மருத்துவமும் ஐரோப்பிய நாட்டு முறைப்படி வகுத்தளிக்கப்பட்டு வந்தது.

இம்மருத்துவம் பெரும்பாலும் சித்தர்கள் கண்ட முறைப்படி நடந்து வந்ததெனினும் பெயர் நாட்டு மருத்துவம் என்றே வழங்கப்பட்டு வந்தது. மருத்துவர்கள் நாட்டு வைத்தியர் எனப்பட்டனர். தமிழகத்தில் முகலாயரின் மருத்துவமுறையான யூனானி மருத்துவம் மிகச் சிறிய அளவில் முகமதிய மருத்துவர்களால் நடைபெற்று வந்தது.

நாட்டு வைத்தியம் என்ற சித்த வைத்தியமருந்துகள் பெரும்பாலும் தாவர மூலிகைக் கொண்டும் சிறுபான்மை வீரம், பூரம், தாளகம் முதலிய பாடாணங்களைக் கொண்டும் இவ்விரண்டின் கலவையாலும் தங்கம், வெள்ளி, தாமிரம், இரும்பு முதலிய உலோகங்களை வேதியல் முறையில் புடமிட்டுத் துகளாக்கிய பற்பம், செந்தூரம், சுண்ணம் இவற்றைக் கொண்டும் தயாரிக்கப்பெற்று வந்தன. தேன், பால் முதலியவைகளும் சூரண வகைகளும் அனுபானங்களாகச் சேர்த்துக் கொள்ளப்பெற்றன.

மூலிகைமருந்துகள் சிற்சில இடங்களில் சிற்சில காலங்களில் மட்டும் கிடைக்குமாதலின் அவற்றை வளர்க்கும் முறையில் சிலர் சேகரித்துக் கடைவைத்து விற்று வந்தனர். அம்முறையில் வணிகரிடம் விலை கொடுத்துப் பெறும் பொருள்கள் கடைச்சரக்கு எனப்பட்டன. நாட்டு மருத்துவர்கள் என்னும் சித்த மருத்துவர்கள் அரிய நோய்களுக்கும் பிணிகளுக்கும் உரிய மருந்துகளை தம் குல வழக்கப்படி பாரம்பரிய முறையில் செய்து கொள்ளும் மருந்துகளைக் கொண்டு வைத்தியம் செய்வார்கள். சாதாரணமாகத் தட்பவெப்பங்களாலும் பருவ மாற்றங்களாலும் உணவு முதலியவற்றின் ஒவ்வாமையாலும் உண்டாகும் நோய்களுக்குக் கியாழம், சூரணம், எண்ணெய் முதலியவைகளை மூலிகைக் கொண்டு தயாரிக்கும் முறைகளை நோய்வாய்ப்பட்டவர்கள் தாம் வீட்டிலேயே தயாரித்துக் கொள்ளும்படிக் கூறித்துணையாக தம் மருந்துகளையும் தருவர்.

அம்முறையில் ஒவ்வொரு குடும்பத்தினுள்ளும் சிலர் தலைவலி, வயிற்றுவலி, உடம்புவலி, காதுவலி, பல்வலி, சிறுகாய்ச்சல், வாந்தி, மலச்சிக்கல், பசிமந்தம், கண்ணோய் முதலிய சாதாரண நோய்களைப் போக்குவதற்குரிய மருந்துகளைத் தலைமுறை தலைமுறையாகத் தெரிந்து வைத்திருப்பார்கள். மகப்பேறு மருத்துவம் மருத்துவ குலக் குடும்பப் பெண்டிராலேயே நிகழ்ந்து வந்தமையான் பெண்களே வீட்டு வைத்தியத்திற்குரிய சிறிய மருந்துகளைத் தெரிந்து வைத்திருப்பர். அதனால் வீட்டு வைத்தியத்திற்கு பாட்டி வைத்தியம் என்பதும் ஒரு பெயர். உணவுப் பண்டங்கள் மூலிகைகள் சுக்கு, மிளகு போன்ற பொருள்களைக்கொண்டு மருந்துகளைச் செய்து கொள்வதனால் இதற்குக் கைவைத்தியம் என்பதும் பெயர்.

வீட்டு வைத்தியம் மருந்து முறைகளில் பெரும்பாலும் உணவுப்பண்டங்களும் உணவாகத் தயாரிக்கப்படும் குழம்பு, ரசம், துவையல், கூட்டு, கஞ்சி, களி இவை வாயிலாகவே மருத்துவம் செய்துகொள்வர். சுக்கு, மிளகு, சீரகம், காயம், கடுக்காய் போன்ற அரிய மூலப்பொருள்களைக் கொண்டே மருந்துகளைத் தயாரித்துக் கொள்வர்.

மருந்துகளும், சூரணம், சுரசம், களிம்பு, தைலம், என்ற வகையிலும் பற்று கலிக்கம், பூச்சு, ஒத்தடம். வேது என்ற முறையிலும் அமையும். வீக்கம், கட்டி முதலிய தோல் தொடர்பான நோய்களுக்குப் பற்று மேல் பூச்சு வாயிலாகவே மருத்துவம் புரிவர். சூடு வைப்பதும் இம்மருத்துவத்தில் ஒரு முறையாகும்.

வீட்டு வைத்தியம் பெரும்பாலும் சிறுகிராமம் கூட்டுக் குடும்பங்களில் பரம்பரையாக மேற்கொள்ளப் பெற்று வந்தன. கிராமங்களின் வளர்ச்சி புதிய கண்டுபிடிப்புக்கள் மக்கள் பெருக்கம் வாழ்க்கைத் தேவைகளை அதிகப்படுத்திகொண்டநிலை நாகரிக வளர்ச்சி ஆங்கில மருத்துவ வளர்ச்சி முதலிய காரணங்களால் மக்கள் தாமே செய்து கொள்ளும் வீட்டு வைத்தியம், குடும்ப வைத்தியம் என்ற முறைகள் குறைந்து வந்தன. பெரும்பாலும் மறந்து, மறைந்து போய்விட்டன. நவீன மருத்துவமுறை மருந்துகளால் பக்க விளைவுகள் ஏற்படுவதையும் பெரும்பொருட்செலவையும் இன்றைய மக்கள் பெரும்பாலும் பொருட்படுத்தாத நிலை வளர்ந்து வருகிறது.

வீட்டு வைத்தியம் குறைந்த செலவுடையது. பக்க விளைவுகளை ஏற்படுத்தாதது. மன அமைதிக்கு ஊறு செய்யாதது. ஆதலின் வீட்டு மருத்துவ முறைகளை மீண்டும் வளப்படுத்துவது நலமாகும். எனினும், வளர்ந்துவரும் மக்கட்பெருக்கம், வேதியல்பொருள்களின்தாக்கம், சுற்றுச்சூழல் மாசு, நாகரிகப்பண்பாட்டு வளர்ச்சி வீட்டிலேயே மருந்துகளைத் தயாரித்துக் கொள்ளும் பொறுமையின்மை, காலம் போதாமை முதலிய காரணங்களால் அது அரிய செயலாக உள்ளது. எனினும், வாய்ப்பும் வசதியும் உடையோராவது மேற்கொள்ளலாம். பிறருக்கும் உதவலாமல்லவா? அதனான் தொன்றுதொட்டு நம் முன்னோர்களால் கடைப்பிடித்து வளர்க்கப்பட்ட வீட்டு வைத்திய முறைகளை இந்தத் தலைமுறையினர் தெரிந்து வைத்திருப்பது பெரும் நன்மை பயக்கும் என்னும் பெரு நோக்கினால் தமிழ்ப் பல்கலைக்கழகம் இந்நூலை வெளியிட ஆவன செய்தது. இதனை மலிவு விலைப் பதிப்பாகக் கொணர வேண்டும் என்பதற்காகவே நூலாக்கப்பணி தொடரப்பட்டது, இந்நூல்

முடித்தளிக்கப்பட்டுப் பல நாட்களுக்குப் பின்னர் முன்னாள் துணைவேந்தர் மாண்புமிகு கதிர். மகாதேவன் அவர்களுக்கும், இந்நாள் துணைவேந்தர் மாண்புமிகு இ. சுந்தரமூர்த்தி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சே. பிரேமா**
பேராசிரியர் மற்றும் தலைவர்
சித்த மருத்துவத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| நளிர் காய்ச்சல், நடுக்கல் காய்ச்சலுக்கு | - | 1 |
| அதிசாரக் காய்ச்சலுக்குக் குளிகை | - | 2 |
| சுகபேதிச் சூரணம் | - | 2 |
| உதிரச் சிக்கலுக்கு | - | 3 |
| முகப்பருவுக்கு | - | 4 |
| இருமல் தீர இலேகியம் | - | 4 |
| பஞ்ச தீபாக்கினி இலேகியம் | - | 5 |
| இஞ்சி இலேகியம் | - | 6 |
| சிவதை வேர் இலேகியம் | - | 7 |
| படைக்குக் குழம்பு | - | 8 |
| குமரித் தைலம் | - | 8 |
| பீனிசத் தைலம் | - | 9 |
| நசியம் | - | 10 |
| பொன்னாங்காணித் தைலம் | - | 10 |
| பொன்னாங்காணித் தைலம் (வேறு) | - | 11 |
| பொன்னாங்காணித் தைலம் (வேறு) | - | 12 |
| மேக சிந்தாமணி மெழுகு | - | 12 |
| குமரி இலேகியம் | - | 13 |
| இருமல் ஈளை தீர இலேகியம் | - | 14 |
| சுகபேதி மாத்திரை | - | 15 |
| இராப்பேதி மாத்திரை | - | 15 |
| பொடுதலைத் தைலம் | - | 16 |
| வாதரோகம் போகப் பற்று | - | 16 |
| பேதி மாத்திரை | - | 17 |
| மூலத்திற்கு மருந்து | - | 17 |

| | | |
|---|---|---|
| தீராத வெட்டை தீர | - | 18 |
| ஐந்து நிமிடத்தில் மலசலம் இறங்க | - | 18 |
| கர்ப்ப ஸ்திரீகளுக்கு மலசலம் போகக் குடிநீர் | - | 18 |
| கபத்திற்குக் கியாழம் | - | 19 |
| மூலம், கருப்பை நழுவாமல் இருக்க இலேகியம் | - | 19 |
| காதில் சீழ் வடிவது போக | - | 19 |
| சர்வாங்க வாதச்சூரணம் | - | 20 |
| மூலநோய் தீர | - | 21 |
| புழுவெட்டு தீர | - | 21 |
| சுகபேதிக் கஷாயம் | - | 21 |
| சுரக்கஷாயம் | - | 22 |
| நெறிக்கட்டி சுரம் போக்கக் கியாழம் | - | 23 |
| வாந்திபேதி தீர | - | 23 |
| வசீகர பூபதி இலேகியம் | - | 24 |
| தாது விருத்தி அல்வா | - | 24 |
| காதில் கட்டி உடைய | - | 25 |
| இரச வீரியத்தால் வாய் வெந்தால் | - | 25 |
| பல் நோவு தீர | - | 25 |
| படர்தாமரை தீர | - | 25 |
| கீல்வாயு தீர எண்ணெய் | - | 25 |
| உஷ்ணவாயு தீர | - | 26 |
| நிணத்திற்கும், கரப்பானுக்கும் மருந்து | - | 26 |
| காதுசெவிடு தீர | - | 27 |
| சன்னிக்கு மாத்திரை | - | 27 |
| பேதிகட்ட மாத்திரை | - | 28 |
| புண்கள் தீர | - | 28 |
| நா வறட்சிக்கு மருந்து | - | 28 |
| மார்புநோவு தீர உருண்டை | - | 29 |
| உதரவாயு தீர | - | 29 |
| மகோதரம் தீர | - | 29 |

| | | |
|---|---|---|
| வாயு, பெருவயிறு தீர | - | 30 |
| குன்மவாயு, வயிற்றுக்கட்டி தீர | - | 30 |
| பித்த குன்மம் தீர | - | 31 |
| மூக்கில் இரத்தம் வருவது தீர | - | 31 |
| சகல புண்ணும் தீர | - | 31 |
| சித்தர் ரகசியம் | - | 32 |
| சூதகவாயு தீரக் கஷாயம் | - | 33 |
| கிரிப்பூச்சி தீர மெழுகு | - | 33 |
| வச்சிரவல்லி சூரணம் | - | 33 |
| குன்மம் தீர | - | 34 |
| நீர் இறங்க | - | 34 |
| மாலைக்கண் தீர | - | 34 |
| வீரிய விருத்திக்கு | - | 35 |
| மருந்தால் வந்த சீதபேதி போகக் - குடிநீர் | - | 35 |
| பேன் சாக | - | 35 |
| பிள்ளை பெறாமல் உள்ளவர்களுக்கு | - | 35 |
| சுரம் தீர பற்பம் | - | 36 |
| சிரங்கு தீர | - | 36 |
| சம்பீரத் தைலம் | - | 36 |
| அமிர்தாமலகத்தைலம் | - | 37 |
| தலைச்சுண்டு தீர | - | 38 |
| இருமல் தீர இளகம் | - | 38 |
| கேசரஞ்சனத் தைலம் | - | 39 |
| சீரகச் சூரணம் | - | 39 |
| மாலைக்கண் தீர (வேறு) | - | 40 |
| பிள்ளை உண்டாக | - | 40 |
| மேனிச் சூரணம் | - | 40 |
| நரைமயிர் மாற | - | 40 |
| நன்னாரி சூரணம் | - | 41 |
| பல்லுறுதிக்கு | - | 42 |

| | | |
|---|---|---|
| தலைப் பொடுகுக்கு | - | 42 |
| சொறி சிரங்கு நமைச்சல் | - | 42 |
| காதுநோவு தீர | - | 43 |
| வீட்டுதூரமாகாதவர்களுக்கு | - | 43 |
| கீழாநெல்லித் தைலம் | - | 43 |
| சீரகத் தைலம் | - | 44 |
| நரம்புச் சிலந்தி தீர | - | 44 |
| வயிற்றுப்பிடுங்கல் தீர | - | 44 |
| விக்கல் தீர | - | 45 |
| அண்டவாதம் தீர | - | 45 |
| மாந்தைக்கு | - | 45 |
| காக்கை வலிப்புத் தீர நசியம் | - | 45 |
| காதுகுடைச்சல் தீர | - | 46 |
| வெள்ளை தீர | - | 46 |
| இருமல் தீர | - | 46 |
| காதுநோவு தீர (வேறு) | - | 46 |
| மாதவிடாய் வர | - | 46 |
| பூ விழுந்த கண்ணுக்கு | - | 47 |
| கை கால் எரிச்சல் தீர | - | 47 |
| பித்த மண்டைக் குடைச்சல் தீர | - | 47 |
| மஞ்சள் வெள்ளை தீர | - | 48 |
| மூலம் தீர | - | 48 |
| நளிர் காய்ச்சல் தீர | - | 48 |
| இரத்தபேதி தீர | - | 48 |
| வறட்டு சூலை தீர | - | 49 |
| பல்வலி தீர | - | 49 |
| கண் எரிச்சல் தீர | - | 49 |
| பல்கிட்டிய சன்னி தீர | - | 49 |
| குழந்தைகளுக்கு செவ்வாப்பு தீர | - | 49 |
| நீர்க்கட்டு தீர | - | 50 |

| | | |
|---|---|---|
| தாய்ப்பால் சுரக்க | - | 50 |
| திமிர் குட்டம் தீர | - | 50 |
| இருமல் தீர (வேறு) | - | 50 |
| பித்தம் தீர | - | 51 |
| மார்பு வலி தீர | - | 51 |
| காசநோய் தீர | - | 51 |
| இரத்தகாசம் தீர | - | 51 |
| வெள்ளை தீர (வேறு) | - | 51 |
| காமாலை தீர | - | 52 |
| சிரங்கு தீர (வேறு) | - | 52 |
| எலிக்கடி தீர | - | 52 |
| உடல் வன்மையாக | - | 52 |
| உறக்கம் வராதவர்களுக்கு | - | 53 |
| மஞ்சள் காமாலை போக | - | 53 |
| பெரும்பாடு தீர | - | 53 |
| நீரடைப்பு தீர | - | 53 |
| காதில் சீழ் வடிவதற்கு | - | 54 |
| பித்த மயக்கம் மாற | - | 54 |
| நீர்க்கட்டுக்கு | - | 54 |
| நீர்க்கட்டு ஏற்பட | - | 54 |
| மேகம் தீர | - | 54 |
| கல்லடைப்பு, நீர்க்கட்டுத் தீர | - | 55 |
| பெருமூத்திரம் தீர | - | 55 |
| காசம் தீர | - | 55 |
| வெள்ளோக்காளம் தீர | - | 56 |
| கர்ப்பம் உண்டாக | - | 56 |
| இஞ்சிக் கசாயம் | - | 56 |
| சொட்டுநீர் தீர | - | 57 |
| இசிவு சன்னி தீர | - | 57 |
| பீனிசத்திற்கு | - | 57 |

| | | |
|---|---|---|
| புண் தீர | - | 58 |
| அரையாப்பு தீர | - | 58 |
| அக்கிக்கு மருந்து | - | 58 |
| பொதுக் கடிக்கு | - | 59 |
| கக்குவான் தீர | - | 59 |
| குழந்தையின் மலசலக்கட்டுக்கு | - | 59 |
| மூச்சடைப்புத் தீர | - | 60 |
| ஆறாத மேக இரணம் தீர | - | 60 |
| பீனிசம் தீர | - | 60 |
| தலைவலிக்குப் பற்று | - | 60 |
| மூக்குப்புண் தீர | - | 61 |
| காதிரைச்சல் தீர | - | 61 |
| அரையாப்புக் கட்டி தீர | - | 61 |
| பிளவை | - | 62 |
| உண்ணாக்கு வளர்ச்சி தீர | - | 62 |
| பவுத்திரம் தீர | - | 62 |
| பல்வலி தீரப் பற்பொடி | - | 62 |
| நரம்பு சிலந்தி தீர (வேறு) | - | 62 |
| பெண் பூப்படைய | - | 63 |
| வெண் குட்டம் தீர | - | 63 |
| சொறி, சிரங்கு பட்சவாதம் தீர | - | 63 |
| விடபேதியில் வாந்தி கண்டால் | - | 64 |
| நீர்க்கட்டு, கல்லடைப்பு உடன்தீர | - | 64 |
| கண்ணோய் தொண்ணூற்றாறும் தீர | - | 64 |
| தித்திப்புக் களிம்பு | - | 64 |
| பேதிக்கு | - | 65 |
| பிள்ளைகளுக்கு, கக்குவான், இரைப்பு தீர | - | 65 |
| கண்புகைச்சல் தீர | - | 66 |
| முறைச் சுரம் தீரக் கஷாயம் | - | 66 |
| சுரம் தீர மாத்திரை | - | 66 |

| | | |
|---|---|---|
| தீரா சுரம் தீர | - | 67 |
| தீரா சுரம் தீர (வேறு) | - | 67 |
| முறைச் சுரம் தீர | - | 67 |
| பேதிக்குச் சூரணம் | - | 67 |
| வயிறு பேதி ஆக | - | 68 |
| பைத்தியம் தீர | - | 68 |
| வாந்தி நிற்க | - | 68 |
| வாந்தி நிற்க (வேறு) | - | 69 |
| கிருமிகள் நீங்க | - | 69 |
| எல்லாவகையான வெப்பம் தீர | - | 69 |
| வெட்டை தீர | - | 69 |
| எட்டு விதமான குன்மம் தீர | - | 70 |
| தீராத குன்மம் தீர | - | 70 |
| வயிறு உப்பிசத்திற்கு மருந்து | - | 71 |
| சூதகவாயு, வயிற்றுவலி, குன்மவலிக்கு மருந்து | - | 71 |
| சூதகவாயு, வயிற்றுவலி, குன்மவலிக்கு மருந்து (வேறு) | - | 71 |
| இரத்தக்கடுப்பு, இரைச்சல் தீர (வேறு) | - | 72 |
| நீரிழிவுக்கு மருந்து | - | 72 |
| வெண் குட்டம் தீர (வேறு) | - | 72 |
| ஆறாத இரணம் தீர | - | 73 |
| நீடித்த நீரடைப்புத் தீர | - | 73 |
| நீரிழிவு தீர | - | 73 |
| கிராணி தீர | - | 74 |
| செவிடு தீர | - | 74 |
| நீரிழிவுக்கு | - | 74 |
| தெற்கத்திகணைக்கு எண்ணெய் | - | 75 |
| மஞ்சள் காமாலை தீர | - | 75 |
| நீர்ச்சுருக்கு தீர | - | 76 |
| சூதகக் கட்டு, பெரும்பாடு தீர | - | 76 |
| சன்னிக்குச் சாறு | - | 77 |

| | | |
|---|---|---|
| நீர்க்கட்டு, நீர்ச்சுருக்கு தீர | - | 77 |
| மேகம் தீர (வேறு) | - | 77 |
| நீர்க்கடுப்பு தீர | - | 78 |
| பீனிசம் தீரத் திரி | - | 78 |
| பீனிசம் தீரத் தைலம் | - | 78 |
| பல்வலிக்கு | - | 78 |
| சூதகவலி தீர | - | 79 |
| பல் ஈறு இரத்தம், வீக்கத்திற்கு | - | 79 |
| பாண்டு காமாலை தீர | - | 79 |
| நீரிழிவு தீர (வேறு) | - | 80 |
| இருமல் தீரச் சூரணம் | - | 81 |
| தாது பெருக | - | 81 |
| தாது பெருக (வேறு) | - | 82 |
| தாதுபெருக (வேறு) | - | 83 |
| உதிர வாயு பெரும்பாடு தீர | - | 83 |
| விரைவாதம் தீர | - | 83 |
| தலைவலி தீர | - | 84 |
| துவரெண்ணெய் | - | 84 |
| இரணக் களிம்பு | - | 85 |
| இரணக் களிம்பு (வேறு) | - | 85 |
| இருமல் தீரச் சூரணம் (வேறு) | - | 86 |
| இரணக் களிம்பு (வேறு) | - | 86 |
| உதிரச் சிக்கல் தீர | - | 87 |
| நெல்லிக்காய் தைலம் | - | 87 |
| வெட்டை தீர (வேறு) | - | 89 |


--------

## நளிர் காய்ச்சல், நடுக்கல் காய்ச்சலுக்கு

அ. 5 கிராம் மிளகிற்கு 500 மி.லி. நீர் சேர்த்து ஊறவைத்துக் காய்ச்சி 125 மி.லி. ஆகக் குறுக்கிக் கொள்ளவும்.

அளவு– 30–60 மி.லி. இருவேளை
தீரும் நோய்கள்: நளிர் காய்ச்சல், நடுக்கல் காய்ச்சல்

ஆ. தேவதாரம், பற்படாகம், கடுக்காய், சுக்கு, கண்டங்கத்தரி, கோட்டம், குமிழ்வேர், சிறுதேக்கு வகைக்கு1 பலம் ( 35 கிராம்) வீதம் ஒன்றிரண்டாக இடித்துலர்த்திச் சூரணத்தை ஒருலிட்டர் நீரில் ஊறவைதது 1/8 பங்காகக் காய்ச்சிக் கொள்ளவும்.

அளவு 30–60 மி.லி. இருவேளை

இ. சீந்தில், சிறுவழுதலை, நிலவேம்பு, குமிழ் இவைகளின் வேர், உலர்ந்த இஞ்சி, கடுக்காய், கடுகு ரோகணி, கோட்டம், சிறுதேக்கு, தேவதாரம், பற்பாடகம், ஆடாதோடை வகைக்கு 1/4 பலம் (8.75 கிராம்) வீதம் 2 படி (2.6 லிட்டர்) தண்ணீரில் போட்டு 1/8 பங்காகக் காய்ச்சி வேளை ஒன்றுக்கு 30–60 மி.லி. வீதம் திப்பிலிப்பொடி வராகனெடை (3.5கிராம்) கூட்டிப்போட்டு ஆறுபொழுது கொடுக்க நீங்கும்.

# அதிசாரக் காய்ச்சலுக்குக் குளிகை

| | | | |
|---|---|---|---|
| 1. | திரிகடுகு | )( | |
| 2. | சாதிக்காய் | )( | |
| 3. | கிராம்பு | )( | |
| 4. | இலவம்பிசின் | )( | |
| 5. | விளாம்பிசின் | )( | |
| 6. | வில்வப்பிசின் | )( | |
| 7. | அதிமதுரம் | )( | |
| 8. | சுழற்சிப்பருப்பு | )( | சம எடை எடுக்கவும். |
| 9. | சீரகம் | )( | |
| 10. | ஓமம் | )( | |
| 11. | கற்கடகசிங்கி | )( | |
| 12. | சிறுதேக்கு | )( | |
| 13. | மாதுளம்பிஞ்சு | )( | |
| 14. | வில்வப்பழச் சக்கை | )( | |
| 15. | பொன்முசுட்டை வேர் | )( | |

இவைகளை நல்லெண்ணெய் விட்டு இளகவறுத்து, தயிர் தண்ணீரில் அரைத்து ஒரு பாக்களவு உருண்டை செய்து உலர்த்தி வைத்துக்கொள்ளவும். வடித்த தயிரில் ஒரு உருண்டை கொடுக்கக் காய்ச்சல், கழிச்சல் முதலியவை தீரும்.

# சுகபேதிச்சூரணம்

**சரக்குகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சுக்கு | – | 1 பலம் | (35 கிராம்) |
| 2. | மிளகு | – | 1 பலம் | (35 கிராம்) |
| 3. | திப்பிலி | – | 1 பலம் | (35 கிராம்) |
| 4. | வால்மிளகு | – | 1 பலம் | (35 கிராம்) |
| 5. | வாய்விளங்கம் | – | 1 பலம் | (35 கிராம்) |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | இலவங்கப்பத்திரி | – | 1 பலம் | (35 கிராம்) |
| 7. | கோரைக் கிழங்கு | – | 2 பலம் | (70 கிராம்) |
| 8. | கடுக்காய்த் தோல் | – | 10 பலம் | (350 கிராம்) |
| 9. | இலவங்கம் | – | 1 பலம் | (35 கிராம்) |

***செய்பாகம் :***

ஒன்பது சரக்குகளையும் நன்கு உலர்த்தி இடித்துச் சூரணித்து வைத்துக் கொள்ளவும்.

***பிரயோகம் :***

வேண்டும் போது காலை நேரத்தில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் கால் நாழிகை உலாவிக் கொண்டிருந்த பின்னர் இச்சூரணத்தில் 1 தோலா (12 கிராம்) நிறையும், இதே நிறையாக நாட்டுச் சர்க்கரையும் சேர்த்து இளவெந்நீரைக் கலந்து சாப்பிட குமட்டல், ஆயாசம், ஆசனக்கடுப்பு முதலிய துன்பங்களின்றி சுகபேதியாகும். தேகபேதத்தினால் ஒருகால் பேதி அதிகமாகவேனும், குறைவாகவேனும் ஆகுமானால் மறுமுறை உட்கொள்ளும்போது முறையே சூரணத்தைக் குறைத்தும், அதிகப்படுத்தியும் சாப்பிட வேண்டும். வாதபித்தரோகத்திற்கும் எல்லாப் பிணிகளையும் ஒருவாறு சாந்தி செய்து பரிகரிக்கும்.

***பத்தியம் :***

அதிக காரமில்லாததும், எளிதில் செரிக்கக் கூடியதுமான ஆகாரம் உட்கொள்ள வேண்டும்.

## உதிரச் சிக்கலுக்கு

| | | |
|---|---|---|
| மூங்கில் குருத்து | – | 2 பலம்(70 கிராம்) |
| சதகுப்பை வறுத்தது | – | அரைக்கால் படி(162 மி.லி) |
| வெள்ளைப் பூண்டு | – | 2 எண்ணிக்கை |

| | | |
|---|---|---|
| மிளகு | – | ¼ பலம்(8.75 கிராம்) |
| கருப்புக்கட்டி | - | 1 பலம் (35 கிராம்) |

சரக்குகளைத் தட்டிக் குடிநீர் வைத்து 1 பலம் (35 கிராம்) பனை வெல்லம், பெருங்காயம் சுட்டு இழைத்து மூன்றுவேளை கொடுக்கவும்.

தீரும் நோய்: உதிரச சிக்கல்.

## முகப்பருவுக்கு

| | | |
|---|---|---|
| துத்தி இலை | )( | |
| வசம்பு | )( | சம அளவு |
| வெள்ளைப் பூண்டு | )( | |
| மிளகு | )( | |

நல்லெண்ணெயில் எரித்துப் பதத்தில் வடித்துப் போடவும்.

## இருமல் தீர இலேகியம்

| | | |
|---|---|---|
| கரிசாலைச்சாறு | – | 5 படி (6.5 லிட்) |
| பொன்னாங்காணிச்சாறு | – | 1 படி(1.3 லிட்) |
| சங்கம்பழச்சாறு | – | 1 படி(650 மி. லிட்) |
| தேன் | – | ½ படி(650.மி. லிட்) |
| பசுநெய் | – | ½ படி (750 மி.லி) |
| பனைவெல்லம் | – | 5 பலம் (175 கிராம்) |
| சுக்கு | )( | |
| திப்பிலி | )( | வகைக்கு |
| மிளகு | )( | 1 பலம் (35 கிராம்) |
| சிற்றரத்தை | )( | |
| கடுக்காய் | )( | |

கடைச் சரக்குகளைப் பொடி பண்ணி வஸ்திரகாயம் செய்து முன் சொன்ன சாற்றில் கலந்து அடுப்பேற்றி எரித்து இலேகிய பதத்தில் இறக்கி நெய் சேர்த்து பிறகு தேன் விட்டுக் கிண்டி பீங்கானில் வைத்துக் கொண்டு அந்தி சந்தி 12 நாள் நெல்லிக்காயளவு சாப்பிட இருமல் தீரும்.

## பஞ்ச தீபாக்கினி இலேகியம்

| | | |
|---|---|---|
| சுக்கு | )( | |
| மிளகு | )( | |
| திப்பிலி | )( | வகைக்கு 1 பலம் (35 கிராம்) |
| ஏலம் | )( | |
| சீரகம் | )( | |
| இஞ்சி | – | 5 பலம் (175 கிராம்) |
| பனைவெல்லம் | – | 5 பலம் (175 கிராம்) |

***செய்முறை:***

இஞ்சியை வெந்நீர் விட்டரைத்து சாறு பிழிந்து, பனைவெல்லத்தில் விட்டு பாகு செய்து அதில் சூரணத்தைத் தூவி பசுநெய் 130 மி.லி விட்டுக் கிண்டி மெழுகு பதத்தில் ஆற்றி தேன் 85 மி.லி விட்டுக் கிண்டி வைக்கவும்.

***அளவு :***

2 கிராம் இருவேளை

***தீரும் நோய் :***

பித்தவாயு, சரீரத்தில் உளைவு, குத்தல், வலி, கடுப்பு எரிச்சல், பேதி, பொருமல், வாயு, கிரகணி, செரியாமை.

# இஞ்சி இலேகியம்

| | | |
|---|---|---|
| இஞ்சி | – | 1 சேர்(280 கிராம்) |
| சுக்கு | )( | |
| மிளகு | )( | |
| திப்பிலி | )( | |
| சீரகம் | )( | |
| இலவங்கப்பட்டை | )( | வகைக்கு |
| சிறுநாகப்பூ | )( | 5 பலம் (175 கிராம்) |
| அதிமதுரம் | )( | |
| செவ்வியம் | )( | |
| தாளிசபத்திரி | )( | |
| அரத்தை | )( | |
| மல்லி | )( | |
| ஏலம் | )( | |
| மகிழம்பூ | )( | |
| சதகுப்பை | )( | |
| ரோசாமொட்டு | )( | |
| சேலம் சர்க்கரை | – | 1 சேர் (280 கிராம்) |
| நெய் | – | 5 பலம் (175 கிராம்) |
| தேன் | – | 5 பலம் (175 கிராம்) |

**செய்முறை:**

இஞ்சியை மேல் தோல் சீவி பொன்னிறமாக வறுத்து இதனுடன் மற்றைய 2 முதல் 15 வரை உள்ள சரக்குகளை வறுத்துப் பொடித்துப் பிறகு 1½ லிட்டர் தண்ணீரில் சர்க்கரையைக் கரைத்துப் பாகுபதம் வந்த உடன் பொடிகளைத் தூவிக் கிளறி பதத்தில் இறக்கி வைத்து நெய்யையும் தேனையும் விட்டுப் பக்குவமாகக் கிளறி எடுத்து வைக்கவும்.

**அளவு:**

2 கிராம், இருவேளை

**தீரும் நோய்:**

குடலிலிருந்து ரத்தம்போல் தண்ணீராய்ப் போவதற்கும், கடகட என்று பச்சைத் தண்ணீராய்ப் போவதற்கும் அதில் சோறு விழுவதற்கும், பசியில்லாமல் வயிறு உப்புசத்திற்கும் கொடுக்கவும்.

## சிவதை வேர் இலேகியம்

| | | |
|---|---|---|
| சிவதை வேர் (பாலில் சுத்தி செய்தது) | – | 10 பலம்(350 கிராம்) |
| கடுக்காய்த்தோல் | – | 2 பலம் (70 கிராம்) |
| கரிசாலைத்தூள் | – | 2 பலம்(70கிராம்) |
| வல்லாரைத்தூள் | – | 2 பலம்(70 கிராம்) |
| புளியாரைத்தூள் | – | 2 பலம்(70 கிராம்) |
| நிலாவாரைத்தூள் | – | 2 பலம்(70 கிராம்) |
| கடுகுரோகிணி | )( | |
| கிராம்பு | )( | |
| திப்பிலி | )( | |
| சிறுநாகப்பூ | )( | |
| வாலுளுவை | )( | வகைக்கு 2 பலம்(70 கிராம்) |
| கற்கடகசிங்கி | )( | |
| கருஞ்சீரகம் | )( | |
| மிளகு | )( | |
| கொத்துமல்லி | )( | |
| தாளிசபத்திரி | )( | |

இவற்றை இடித்துத் தூள் செய்து போதுமான நெய், தேன், சர்க்கரை விட்டு இலேகியம் கிண்டி அந்தி, சந்தி கொட்டைப் பாக்களவு சாப்பிடவும்.

**தீரும் வியாதிகள் :**

மூலச்சூடு, கைகால் எரிவு, உஷ்ணவாயு, மலசலவறட்சி, ஈளை, இருமல், புகைச்சல் தீரும்.

## படைக்குக் குழம்பு

தகரை விதையை ஈனாத வெள்ளாட்டுக் கோமியத்தில் 60 நாழி ஊறப் போட்டு எடுக்கவும்.

| | | |
|---|---|---|
| கார்போக அரிசி | )( | 10 கிராம் |
| கஸ்தூரி மஞ்சள் | )( | 10 கிராம் |
| பூலாங்கிழங்கு | )( | 10 கிராம் |
| செண்பகமொக்கு | )( | 10 கிராம் |
| எருமைத் தயிர் | )( | 30 மி.லி |
| எலுமிச்சம்பழம் | )( | 2 |

இவற்றை அம்மியில் வைத்து மெழுகு போல அரைத்து படைக்கு மேல் தடவவும். கழுவாமல் 3 நாட்கள் வைக்கவும். 4 ம் நாள் அரைப்புச் சுட்டுப் போட்டுக் கழுவப்படை நீங்கும். பிறகு நற்றும்பையின் 10 இலைகளைச் சாப்பிடவும்.

## குமரித் தைலம்

| | | |
|---|---|---|
| குமரிச் சாறு(கற்றாழை) | – | 2படி (2.6 லிட்) |
| பசும்பால் | – | 2படி (2.6 லிட்) |
| நல்லெண்ணெய் | – | 2 படி(2.6 லிட்) |
| சுக்கு | : | |
| மிளகு | : | |
| திப்பிலி | : | |
| கடுக்காய் | : | |
| நெல்லிவற்றல் | : | |
| தான்றிக்காய் | : | |
| சடாமாஞ்சில் | : | |
| கோட்டம் | : | |
| நற்சீரகம் | : | |
| அதிமதுரம் | : | |

| | | |
|---|---|---|
| பூஞ்சாந்து | : | |
| ஏலம் | : | |
| பச்சிலை | : | வகைக்கு 5பலம் (175 கிராம்) |
| பூலாங்கிழங்கு | : | |
| இலவங்கப்பட்டை | : | |
| செவ்வல்லி | : | |
| அக்ரகாரம் | : | |
| கந்தகம் | : | |
| கடுகுரோகிணி | : | |
| செண்பகமொக்கு | : | |
| ஆனைத்திப்பிலி | : | |
| சோம்பு | : | |
| கொம்பு மஞ்சள் | : | |

இந்தக் கடைச் சரக்குகளை ஆவின் பாலால் ஆட்டி, மற்றவைகளுடன் கலந்து எரித்து ஆறவைத்து வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

### தீரும் நோய்:

தலைமுழுகி வரக் கண் சூடுநீங்கிக் குளிர்ச்சி உண்டாகும். கூந்தல் நரை நீங்கிக் கறுத்து வளரும். தலைவலி நீங்கும்.

## பீனிசத் தைலம்

| | | |
|---|---|---|
| சவுரிப்பழச் சாறு | – | 1 படி |
| பொடுதலைச் சாறு | – | 1 படி |
| பசும்பால் | – | 1 படி |
| வெள்ளை மிளகு | – | 1 படி |
| நல்லெண்ணெய் | – | 1 படி |

இவற்றைப் பதமாய்க் காய்ச்சிக் குளிக்க கபாலவலி, கபாலக் குத்து, பீனிசங்கள், மண்டைச் சூலை, நேத்திர மாசு, நீர்க்கடுப்பு, மேகச்சூடு நீங்கும்.

## நசியம்

| | | |
|---|---|---|
| ஆவின் நெய் | )( | வகைக்கு 1/8 படி (162 மி.லி) |
| மாதுளம்பூச் சாறு | )( | |
| கோஷ்டம் | )( | |
| ஏலம் | )( | |
| குங்குமப்பூ | )( | 1 வராகனெடை (3.5 கிராம்) |
| இலவங்கப்பட்டை | )( | |
| அதிமதுரம் | )( | |
| கருஞ்சீரகம் | )( | |
| இலவங்கப்பத்திரி | )( | |

கடைச்சரக்குகளை, ஆவின் பாலில் அரைத்து மாதுளம்பூச் சாற்றில் கலந்து நெய் விட்டுக் காய்ச்சி வடித்து நாசியில் நசியமிட சகல பீனிசமும் தீரும்.

## பொன்னாங்காணித் தைலம்

| | | |
|---|---|---|
| நல்லெண்ணய் | – | 5 சேர் (1.4 கி.கிராம்) |
| பொன்னாங்காணிச்சாறு | – | 5 சேர் (1.4 கி. கிராம்) |

கீழ்க்கண்ட சரக்குகளைக் கொண்டு கஷாயம் வைத்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| சுக்கு | )( |
| மிளகு | )( |
| சோம்பு | )( |
| சீரகம் | )( |

| | | |
|---|---|---|
| கிராம்பு | )( | |
| பூலாங்கிழங்கு | )( | வகைக்கு |
| பச்சிலை | )( | 5.6 கிராம் |
| சன்னலவங்கப்பட்டை | )( | |
| கடுக்காய்த்தோல் | )( | |
| நெல்லிமுள்ளி | )( | |
| கஸ்தூரி மஞ்சள் | )( | |
| கிளியூறல்பட்டை | )( | |
| செண்பகமொக்கு | )( | |
| சந்தனக் கட்டை | )( | |
| புனுகுச் சட்டம் | – | 2 வீசை (2.8 கி. கிராம்) |

***தீரும்நோய்:***

வாரம் இருமுறை தலைக்குத் தேய்த்துக் குளிக்க, உட்சுரம், உஷ்ணம், கை கால் உடம்பெரிச்சல், கண் எரிச்சல், கபாலச்சூடு, தேகவலி, குன்மம் நீங்கும். முளை மூலம், இரத்த மூலம் நீங்கும்.

## பொன்னாங்காணித் தைலம் (வேறு)

| | | |
|---|---|---|
| பொன்னாங்காணிச் சாறு | – | 1 படி (1.3 லி.) |
| நல்லெண்ணெய் | – | 1 படி (1.3 லிட்) |
| அதிமதுரம் | )( | |
| கருஞ்சீரகம் | )( | 1 பலம் (35 கிராம்) |
| செங்கழுநீர்க் கிழங்கு | )( | |
| கோட்டம் | )( | |

கடைச்சரக்குகளை ஆவின் பாலில் அரைத்தச் சாறு , எண்ணெய் இவற்றில் கலந்து எரித்து, வடித்துக் குளிக்கவும். உட்சுரம், உஷ்ணம், கை கால் உடம்பு எரிவு, கண் எரிவு, கபாலச் சூடு, தேகவலி, குன்மம் நீங்கும்.

# பொன்னாங்காணித் தைலம் (வேறு)

| | | |
|---|---|---|
| பொன்னாங்காணிச் சாறு | – | 2 படி(2.6 லிட்) |
| நல்லெண்ணெய் | – | 2 படி(2.6 லிட்) |
| ஆவின் பால் | – | 2 படி(2.6 லிட்) |
| நெல்லிக்காய்ச் சாறு | – | 1 படி(1.3 லிட்) |
| கையாந்தகரைச் சாறு | – | 1 படி(1.3 லிட்) |
| அதிமதுரம் | – | 2 பலம்(70 கிராம்) |

அதிமதுரத்தைப் பாலில் அரைத்துச் சாறுகளையும் எண்ணெயையும் ஒன்றாகக் கலந்து காய்ச்சி வடித்துக் குளிக்க முன்சொன்ன பிணிகள் நீங்கும்.

# மேக சிந்தாமணி மெழுகு

| | | |
|---|---|---|
| கஸ்தூரி மஞ்சள் | )( | |
| பூவரசம்பட்டை | )( | |
| அழிஞ்சில்பட்டை | )( | |
| சதுரக்கள்ளிப்பட்டை | )( | |
| கொம்புக் கள்ளிப்பட்டை | )( | |
| சிவனார்வேம்புச் சமூலம் | )( | 2 பலம் (87.5 கிராம்) |
| சித்திரமூல வேர்ப்பட்டை | )( | |
| பரங்கிப்பட்டை | )( | |
| கடுக்காய்த்தோல் | )( | |
| கடுகுரோகிணி | )( | |
| சூரத்துநிலாவரை | )( | |
| காக்கரட்டான் விதை | )( | |
| கருஞ்சீரகம் | )( | |
| கார்போக அரிசி | )( | |
| வால்மிளகு | )( | ½ பலம் (17.5 கிராம்) |
| முருங்கை விதை | )( | |

| | | |
|---|---|---|
| காட்டுச்சீரகம் | )( | |
| வீரம் | )( | |
| பூரம் | )( | |
| இரசம் | )( | 1¼ வராகனெடை( 4.37 கிராம்) |
| இலிங்கம் | )( | |
| இரசசெந்தூரம் | )( | |

பஞ்ச இரசங்களையும் சுத்தி செய்து தேன் விட்டரைக்கவும். கடைச் சரக்குகளைச் சூரணம் செய்யவும். சூரணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தூவித் தேன் விட்டு அரைத்து மெழுகுபதமாய் கிண்டிப் பத்திரப் படுத்தவும்

தினமும் இருவேளை சுண்டைக்காய் அளவு அல்லது சிறிது குறைவாக உடல்வன்மைக்கு ஏற்றபடி 20 நாட்கள் உட்கொள்ளவும். கிரந்தி, வடுப்புண், அரையாப்பு, வெள்ளை, கருமேகம், குட்டம், நீர்ச்சுருக்கு, அண்டவாயு, குன்மம், முடக்கு, சுவாசகாசம், வலி, இசிவு, கபாலச் சூலை, காமாலை தீரும்.

# குமரி இலேகியம்

| | | |
|---|---|---|
| சோற்றுக்கற்றாழை | – | 1 வீசை (1.4 கி. கிராம்) |
| சீனாக் கற்கண்டு | – | 1 வீசை (1.4 கி. கிராம்) |
| பசும்பால் | – | ½ படி (650 மி.லி) |
| நன்னாரி | – | 8 பலம் (280 கிராம்) |
| கசகசா | – | 8 பலம் (280 கிராம்) |
| சீமை நீர்முள்ளிவிதை | )( | |
| சப்ஜாவிதை | )( | |
| சன்னலவங்கப்பட்டை | )( | |
| சீரகம் | )( | எடை 1 பலம் (35கிராம்) |
| வால்மிளகு | )( | |
| சாதிக்காய் | )( | |
| இலேசாகக் கீறிய பேரீச்சம்பழம் | – | 4 பலம் ( 140 கிராம்) |

**செய்முறை :**

முதல் ஐந்து சரக்குகளை ஒரு இரும்புக் கடாயில் போட்டுக் கிண்டவும். கற்றாழை நீர் சுண்டியபின், சர்க்கரையைக் கலந்து பொன்னிறமாகும் பதத்தில் கடைச்சரக்குகளின் சூரணங்களைக் கொட்டிக் கிளறி 10 பலம் (350 கிராம்) நெய்விட்டுப் பிசைந்து வைக்கவும். மறுநாள் பூணில்லாத உலக்கையால் இடித்து ஒன்றாகச் செய்து வைத்துக் கொள்ளவும்.

**தீரும் நோய் :**

3 முதல் 6 கிராம் இருவேளை 20 நாட்கள் உண்ண மேகம் தொடர்பான உஷ்ணம், கணைச்சூடு தீரும், தாதுவிருத்தியும் ஏற்படும். இதைப் பெண்களுக்குத் தர கருப்பாசயம் பலப்பட்டு மாதவிடாய் தொடர்பான பற்பல பிணிகள் நீங்கிப் பிள்ளைப்பேறு ஏற்படும்.

**உணவு:**

இச்சாபத்தியமாக நல்ல உணவுப் பொருட்களை வேளை தவறாமல் உட்கொள்ளல் வேண்டும்.

## இருமல் ஈளை தீர இலேகியம்

| | | |
|---|---|---|
| சத்திச்சாரம் | – | 1/8 பலம் (4.37 கிராம்) |
| நவச்சாரம் | – | 1/8 பலம் (4.37 கிராம்) |
| சித்திரமூலவேர்ப்பட்டை | – | 1/8 பலம் (4.37 கிராம்) |
| அரிசித்திப்பிலி | – | 1/8 பலம் (4.37 கிராம்) |
| ஆனைத்திப்பிலி | – | 1/8 பலம் (4.37 கிராம்) |
| சுக்கு | – | 1/8 பலம் (4.37 கிராம்) |
| இந்துப்பு | – | 1/16 பலம் (2.18 கிராம்) |
| நல்லவெல்லம் | – | 1/8 பலம் (4.37 கிராம்) |

இவற்றை இடித்துச் சூரணம் செய்து கொள்ளவும். ஆடாதோடைச் சாறு 1 படி (1.3 லிட்) வெல்லத்தைக் கரைத்துக் காய்ச்சி, சூரணத்தைக்

கொட்டி, தேன்விட்டுக் கிண்டி, இருவேளை கொட்டைப் பாக்களவு உண்ணவும். இச்சா பத்தியம்.

**தீரும் நோய்:**

இருமல், ஈளை

## சுகபேதி மாத்திரை

| | | |
|---|---|---|
| வசம்பு சுட்ட பச்சை நெடியில்லாத கரி | – | 2 பலம் (70 கிராம்) |
| கடுக்காய்த்தோல் | – | 2 பலம் (70கிராம்) |
| நெல்லிவற்றல் | – | 2 பலம் (70கிராம்) |
| தான்றிக்காய் | – | 2 பலம் (70 கிராம்) |
| நேர்வாளம் | – | 1 பலம்(35 கிராம்) |

சங்கிலைச் சாற்றில் 12 மணி நேரம் அரைத்துக் குன்றிமணியளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

**அளவு:**

காலை மாத்திரம் 1 மாத்திரை அருந்த சுகபேதி உண்டாகும். எலும்பு சூப்பு, இரவில் சுக்கு மிளகு கஷாயம் வைத்துக் குடிக்கவும். தேகவன்மை காலவன்மைக்கு ஏற்றவாறு காலையில் மட்டும் அருந்த பேதியாகும்.

## இராப்பேதி மாத்திரை

| | | |
|---|---|---|
| சுத்தித்த வாளம் | – | 5 பலம் (175 கிராம்) |
| சுத்தித்த பூரம் | – | 5 பலம் (175 கிராம்) |

கல்வத்தில் 1 பிடி சாதம் போட்டு அதில் மேற்படி சரக்குகளைக் கலந்து அரைத்து, மிளகு அளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக் கொண்டு, இரவில் சாப்பாட்டுக்குப் பின் ஒன்று அல்லது இரண்டு

மாத்திரைகளை ஒரு பிடி சாதத்தில் வைத்து விழுங்கவும். மூன்றாவது சாமம் முதல் பேதியாகும். உடலுக்கு அலுப்பு இராது.

காலையில் சூப்பும், சுடுசோறும் உண்ணவும்.

## பொடுதலைத் தைலம்

| | | |
|---|---|---|
| பொடுதலைச் சாறு | )( | |
| எலுமிச்சம்பழச்சாறு | )( | வகைக்கு 1 படி(1.3 லிட்) |
| நல்லெண்ணெய் | )( | |
| மிளகு | )( | 1 பலம் (35 கிராம்) |
| சீரகம் | )( | 1 பலம் (35 கிராம்) |

இந்தச் சாறுகளையும் எண்ணெயையும் கலந்து, மிளகு, சீரகம் இரண்டையும் பசும்பால் விட்டரைத்து எண்ணெயில் போட்டுப் பதமாகக் காய்ச்சி எடுத்துக் கொள்ளவும். தினமும் தலைக்குப் பதம் போட்டு வருவதுடன், வாரத்திற்கு இரண்டு, மூன்று முறை குளிக்க பூச்சிவெட்டு, மயிர் உதிர்தல் நீங்கித் தலைமயிர் நன்கு வளரும்.

## வாதரோகம் போகப் பற்று

| | | |
|---|---|---|
| ஓமம் | )( | |
| வாய்விளங்கம் | )( | |
| கெட்டி மிளகு | )( | ¼ தோலா (3 கிராம்) |
| பெருங்காயம் | )( | |
| இரத்தபோளம் | )( | |
| சுக்கு | )( | |

இவற்றைக் கருஊமத்தைச் சாற்றால் குழம்பு பதமாய் அரைத்து வலியுள்ள இடத்தில் தடவி தீயில் காட்டவும்.

# பேதி மாத்திரை

| | | |
|---|---|---|
| வறுத்தவாளம் | )( | 3 வராகன்(10.5 கிராம்) |
| பச்சைவாளம் | )( | 1 வராகன்(5.25 கிராம்) |
| இளம் கடுக்காய் | )( | 4 ½ வராகன் (15.7 கிராம்) |
| சுக்கு | )( | 4 ½ வராகன்( 15.7 கிராம்) |
| மிளகு | )( | 4 ½ வராகன் (15.7 கிராம்) |
| திப்பிலி | )( | 4 ½ வராகன் (15.7 கிராம்) |
| இந்துப்பு | )( | 4 ½ வராகன் (15.7 கிராம்) |
| கடுகுரோகிணி | )( | 4 ½ வராகன் (15.7 கிராம்) |
| கடுக்காய்த்தோல் | )( | 4 ½ வராகன் (15.7 கிராம்) |

இவற்றைப் பழச்சாற்றில் அரைத்து, பட்டாணி அளவு மாத்திரை செய்யவும். காலையில் சாப்பிடப் பேதியாகும்.

# மூலத்திற்கு மருந்து

| | | |
|---|---|---|
| விழுதி இலைச் சாறு | – | ¼ (325 மி.லி) |
| வெங்காயச் சாறு | – | 1/8 படி (162 மி.லி) |
| எலுமிச்சம்பழச்சாறு | – | 1/16 படி (81 மி.லி) |
| குமரிச்சாறு | – | 1/16 படி (81 மி.லி) |
| கடுக்காய்த் தோல் | – | 1/16 பலம் (2.18 கிராம்) |
| ஊற்றிய விளக்கெண்ணெய் | – | ¼ படி (325 மி.லி) |

இந்தச் சாறுகளையும் சூரணத்தையும் ஊற்றிய விளக்கெண்ணெயுடன் காய்ச்சிப் பதத்தில் வடித்துக் காலையில் வேளைக்கு (ஒன்று அல்லது இரண்டு கரண்டி அளவு) 5 மி.லி. முதல் 10 மி.லி கொடுக்கவும்.

***தீரும்நோய்:***

பவுத்திரம் போகும், மூலத்திற்கு நிலப்பனைக்கிழங்கு சூரணம் 3 கிராம் அளவு மாலையில் தரவும்.

## தீராத வெட்டை தீர

முற்றிய பூவரசம்பட்டைத் தூளைப் புதுப் பானையில் இட்டு 3 படி (3.9 லிட்) பசு மோர் கெட்டியானது விடவும். 90 நாழிகை ஊறவிடவும். 1/8 படி (162 மி.லி) தெளிவை இறுத்து 7 நாள் 14 வேளை தரவும். புளியைத் தள்ளி உப்பை வறுத்துச் சேர்க்கவும். 9 ம் நாள் ஓமம் தேய்த்துக் குளிக்கவும். 16 ஆம் நாள் எண்ணெய் தேய்த்துக் குளிக்கவும். பின்பு எல்லாவற்றையும் சேர்த்துக் கொள்ளவும்.

## ஐந்து நிமிடத்தில் மலசலம் இறங்க

| | | |
|---|---|---|
| இரச கற்பூரம் | – | 3 பலம் (105 கிராம்) |
| பூநீக்கிய இலவங்கம் | – | ¾ பலம் (26.25 கிராம்) |
| ஓமப் பொட்டு | – | ¾ பலம் (26.25 கிராம்) |

இவற்றை வரிக்குமட்டிச் சாற்றால் 12 மணி நேரம் அரைத்துப் பட்டாணி அளவு மாத்திரை செய்து உலர்த்தவும். சோம்பு 1 பலம் (35 கிராம்), திராட்சை 1 பலம் (35 கிராம்) கஷாயம் வைத்து அதனுடன் 1 மாத்திரை உண்ண 5 நிமிடத்தில் மலசலம் இறங்கும்.

## கர்ப்ப ஸ்திரீகளுக்கு மலசலம் போகக் குடிநீர்

| | | |
|---|---|---|
| வேப்பங்கொழுந்து | – | 1 பிடி |
| கடுக்காய் | – | 4 |
| தண்ணீர் | – | 1 படி (1.3 லிட்) |
| களிப்பாக்கு | – | 4 |

வேப்பங்கொழுந்தை சட்டியிலிட்டுப் பொன்னிறமாக வறுக்கவும். கடுக்காய்த் தோல், களிப்பாக்கை நறுக்கித் தண்ணீரிலிட்டு உழக்காகக் காய்ச்சி வடிகட்டி 30 மி.லி முதல் 60 மி.லி சுடச்சுட உட்கொள்ளவும்.

**தீரும்நோய்:**

கர்ப்பிணிகளுக்கு உண்டாகும் மலசலக்கட்டு

## கபத்திற்குக் கியாழம்

| | |
|---|---|
| வெள்ளை பூண்டுஇலை | )( |
| கண்டங்கத்திரிவேர் | )( |
| ஆடாதொடை வேர் | )( |
| தூதுவளை வேர் | )( |
| அதிமதுரம் | )( |
| சிற்றரத்தை | )( |

இவற்றைக் கியாழம் வைத்து 30 முதல் 50 மி.லி. கொடுக்கவும்.

**தீரும் நோய்:**

நெஞ்சில் கட்டிய கபம்

## மூலம், கருப்பை நழுவாமல் இருக்க இலேகியம்

| | | |
|---|---|---|
| மிளகுத் தூள் | /– | 50 கிராம் |
| கசகசா | – | 50 கிராம் |
| தேக்குவிதைத் தூள் | – | 75 கிராம் |
| ஓமம் | – | 50 கிராம் |

இவற்றைத் தனித்தனியாகத் தூள்செய்து 250 கிராம் தேன் கலந்து இலேகியமாக்கவும். காலை, மாலை வேளை தவறாமல் சாப்பிட்டுவர மூலம் நீங்கும். கருப்பை நழுவாமல் இருந்து தங்கிவிடும்.

## காதில் சீழ் வடிவது போக

| | | |
|---|---|---|
| சித்திரமூலம் | )( | |
| பிரண்டை | )( | சம அளவு |

இவற்றை நசுக்கி, வெள்ளாட்டுக் கோமயத்தில் வேகவைத்து வடித்து 2 முதல் 4 துளிகள் வரை காதில் ஊற்ற சீழ்மாறி நிணம் ஆறும்.

## சர்வாங்க வாதச்சூரணம்

| | | | |
|---|---|---|---|
| 1. | கொன்றைப் பட்டை | – | 1 பலம் (35 கிராம்) |
| 2. | மாவிலிங்கப் பட்டை | – | 1 பலம் (35 கிராம்) |
| 3. | கண்டங்கத்திரி வேர் | – | 1 பலம் (35 கிராம்) |
| 4. | சங்கம் வேர் | – | 1 பலம் (35 கிராம்) |
| 5. | வாதமடக்கிவேர் | – | 1 பலம் (35 கிராம்) |
| 6. | பூதகரப்பான்பட்டை | – | 1 பலம் (35 கிராம்) |
| 7 | தூதுவளை சமூலம் | – | 1 பலம் (35 கிராம்) |
| 8 | இந்துப்பு | – | 1 பலம் (35 கிராம்) |
| 9. | வெள்ளறுகு | – | 1 பலம் (35 கிராம்) |
| 10 | காயம் | – | 1 பலம் (35 கிராம்) |
| 11. | சுக்கு | – | 1 பலம் (35 கிராம்) |
| 12. | வளையலுப்பு | – | 1 பலம் (35 கிராம்) |
| 13. | வெடியுப்பு | – | 1 பலம் (35 கிராம்) |
| 14 | கல்லுப்பு | – | 1 பலம் (35 கிராம்) |
| 15 | சித்திரமூலப்பட்டை | – | 1 பலம் (35 கிராம்) |

***செய்முறை :***

15 சரக்குகளையும் கல்லுரலில் போட்டு இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொள்ளவும்.

***அளவு:***

வேளைக்கு மூவிரல் அளவு இருவேளை உண்ணவும். சூலை, காப்பசூலை, குடல்வாதம், வாதசூலை, இரத்த பித்தசூலை, சர்வாங்க வாதம் தீரும்.

***பத்தியம் :***

இச்சா பத்தியம்.

## மூலநோய் தீர

| | | |
|---|---|---|
| மிளகு | – | 50 கிராம் |
| சோம்பு | – | 75 கிராம் |
| தேன் | – | 100 கிராம் |

முதல் இரண்டையும் தூள் செய்து தேனில் ஒன்றாக இலேகியம் போல் கலந்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு:**

சுண்டைக்காயளவு தேனில் இருவேளை உண்ணவும்.

**பத்தியம்:**

மோர் சோறு மட்டும் உண்ணவும்.

## புழுவெட்டு தீர

| | | |
|---|---|---|
| மிளகுத்தூள் | )( | |
| வெள்ளை வெங்காயச் சாறு | )( | சம அளவு |
| உப்பு | )( | |

இவற்றைக் கலந்து கொண்டு புழுவெட்டால் தலையில் மயிர் உதிர்ந்த இடத்தில் தேய்க்கவும். இரவில் தேய்த்துவிட்டுக் காலையில் வேப்பிலை, மஞ்சள் அரைத்துக் குளித்து வரவும். மயிர் முளைக்கத் தொடங்கும்.

## சுகபேதிக் கஷாயம்

| | | |
|---|---|---|
| ரோசாமொக்கு | – | 1 தோலா (12 கிராம்) |
| பிஞ்சு கடுக்காய் | – | 1 தோலா (12 கிராம்) |
| சோம்பு | – | ½ தோலா (6 கிராம்) |

| | | |
|---|---|---|
| அதிமதுரம் | – | 1 தோலா ( 12 கிராம்) |
| நெல்லி வற்றல் | – | ½ தோலா (6 கிராம்) |
| சுக்கு | – | ¼ தோலா (3 கிராம்) |
| வெள்ளரி விதை | – | ¼ தோலா (3 கிராம்) |

இவைகளை ஒன்றிரண்டாக இடித்து ஒரு பாண்டத்தில் போட்டு (24 அவுன்ஸ்) 672 மி.லி தண்ணீர் விட்டு (½ ஆழாக்காகக்) 84 மி.லி சுண்டக் காய்ச்சவும். வடிகட்டி, சீமை இந்துப்பு அல்லது நாட்டு இந்துப்பு இவை இரண்டிலும் ஒன்றை ¾ அல்லது 1 தோலா) 9 அல்லது 12 கிராம் அளவு சேர்த்து உடல் வன்மைக்குத் தக்கபடி கலக்கிச் சாப்பிடவும்.

ஐந்தாறு முறை பேதியாகும். தேகம் உஷ்ணப்படாது. பேதி நின்றபின், வேண்டிய உணவை உட்கொள்ளலாம்.

## சுரக்கஷாயம்

| | | |
|---|---|---|
| நிலவேம்பு | )( | |
| கோரைக்கிழங்கு | )( | |
| கடுகுரோகிணி | )( | |
| பற்படாகம் | )( | 1 தோலா (12 கிராம்) |
| சீந்தில்கொடி | )( | |
| வேப்பம்பட்டை | )( | |

இவற்றை ½ படி (650 மி.லி) தண்ணீரில் போட்டு 2 மணி நேரம் ஊறின பின்பு ½ ஆழாக்காகக் (84 மி.லி) காய்ச்சி, அதனை மூன்றுவேளை பகுத்து 4 மணி நேரத்திற்கு ஒரு முறை உட்கொள்ளவும். குளிர்சுரம் முதல் எல்லாவகைக் காய்ச்சல்களும் குணப்படும். இதனோடு சுரத்தைக் குணமாக்க, ஏதேனும் ஒரு செந்தூரத்தையேனும் மாத்திரையையேனும் உட்கொள்ளவும்.

**குறிப்பு:**

அரை ஆழாக்கு – 3 அவுன்ஸ் (90 மி.லி) அளவு உடையது.

## நெறிக்கட்டி சுரம் போக்கக் கியாழம்

| | | |
|---|---|---|
| சுக்கு | )( | |
| திப்பிலி | )( | |
| மிளகு | )( | |
| பரங்கிப்பட்டை | )( | வகைக்கு 1 பலம் (35 கிராம்) |
| அமுக்கராக்கிழங்கு | )( | |
| பிரப்பங்கிழங்கு | )( | |
| நன்னாரி வேர் | )( | |
| சீந்தில்தண்டு | )( | |
| வெள்ளெருக்கு | – | 2 பலம் (70 கிராம்) |

இவற்றைத் தூள் செய்து ½ பலமாக (17.5 கிராம்) தூள் போட்டு கஷாயம் வைத்து 30 மி.லி முதல் 60 மி.லி பால்விட்டு சர்க்கரை சேர்த்துக் காபியைப்போல் குடிக்கவும்.

இச்சா பத்தியம்.

**குறிப்பு:**

ஜின்டான் மாத்திரையில் 3 மாத்திரையை வெற்றிலையில் வைத்துக் தின்று, பின் காபியைக் குடிக்கவும்.

## வாந்திபேதி தீர

| | | |
|---|---|---|
| உப்பு | – | 1 பங்கு |
| நெல்லிவற்றல் | – | 2 பங்கு |

இவற்றை இடித்துத் தூள் செய்து ஒட்டில் வைத்து சீலைமண் செய்து முழுப்புடம் போட்டு 2 சிட்டிகை தேன், சீனியில் கொடுக்கவும்.

**தீரும் நோய்:**

வாந்தி, பேதி,. வயிற்றுப்புசம்.

## வசீகர பூபதி இலேகியம்

| | | |
|---|---|---|
| சாதிக்காய | – | 1 பலம் (35 கிராம்) |
| ஏலம் | – | 1 பலம் (35 கிராம்) |
| வால்மிளகு | – | 1 பலம் (35 கிராம்) |
| கிராம்பு | – | 1 பலம் (35 கிராம்) |
| சீரகம் | – | 1 பலம் (35 கிராம்) |
| அதிமதுரம் | – | 5 பலம் (175 கிராம்) |
| அக்கிரகாரம் | – | 1 பலம் (35 கிராம்) |
| பரங்கிப்பட்டை | – | 10 பலம் (350 கிராம்) |
| குங்குமப்பூ | – | 1/8 பலம் (4.37 கிராம்) |

இவற்றைச் சூரியனில் உலர்த்தி இடித்து, பொடி செய்து வடிகட்டி சர்க்கரை சமன் எடுத்துத் தண்ணீரால் கரைத்துப் பாகுசெய்து சூரணத்தைச் சேர்த்துப் பதமாய்க் கிண்டி பாக்களவு (3 முதல் 6 கிராம்) 2 வேளை சாப்பிடவும். மந்தவாயு, மேகசூலை, உள்மூலம், புறமூலம் தீரும். தாது விருத்தி உண்டாகும்.

## தாது விருத்தி அல்வா

| | | |
|---|---|---|
| பருத்திக் கொட்டை | – | 3 காசு (495 மி.லி) |
| பாதாம்கொட்டை | – | ½ வீசை (700 கிராம்) |
| வெள்ளைச்சர்க்கரை | – | ½ வீசை (700 கிராம்) |
| கோதுமை அரிசி | – | 1 சேர் (280 கிராம்) |
| நெய் | – | 12 பலம் (420 கிராம்) |

இவைகளைச் சேர்த்து அல்வாப் பண்ணி சாப்பிடவும். தாதுவிருத்தி உண்டாகும்.

## காதில் கட்டி உடைய

குப்பைமேனி இலையைக் கசக்கி 4, 5 துளிகள் காதில் பிழிய காது கட்டி உடைந்து இரணம் ஆறும், தினவடங்கும்.

## இரச வீரியத்தால் வாய் வெந்தால்

வீரம், பூரம், இரசம் இவைகளின் வேகத்தால் வாய் வெந்தால் தும்பைப்பூவை வதக்கித் தாய்ப்பால் விட்டுப்பிழிந்து 10 முதல் 20 மி.லி கொடுக்கவும்.

## பல் நோவு தீர

கருணைக் கிழங்குவேரும், கந்தகமும் சமமாய் அரைத்து நாக்கிலும், பல்லிலும் தேய்த்துக் கொண்டுவர பல்லடி கிரந்தி தீரும்.

## படர்தாமரை தீர

கொன்றைத்துளிர், புளியந்துளிர், மிளகு சமமாக அரைத்துப் பூசிவரப்போகும்.

## கீல்வாயு தீர எண்ணெய்

| | | |
|---|---|---|
| விளக்கெண்ணெய் | – | 1 சேர் (280 கிராம்) |
| சங்கங்குப்பிச்சாறு | – | 1 சேர் (280 கிராம்) |
| இலத்நிப் பூண்டு | – | 1 பலம் (35 கிராம்) |
| மிளகு | – | ¼ பலம் (8.75 கிராம்) |

இவற்றைப் போட்டுக் காய்ச்சி வடித்து1 வேளைக்கு இரண்டு பொட்டுக் கரண்டி கொடுத்து 3 நாள் பத்தியம் மறுபத்தியம் 3 நாள் வைத்து 7ம் நாள் தலைக்கு வார்க்க கீல்வாயு போகும்.

## உஷ்ணவாயு தீர

| | | |
|---|---|---|
| எருக்கம்பூ | )( | |
| வேப்பிலை | )( | |
| ஓமம் | )( | |
| மஞ்சள் | )( | சம எடை |
| உப்பு | )( | |
| பிரண்டை | )( | |

இவற்றைச் சேர்த்து இடித்து ஓட்டில் வைத்து மூடிப் புடம் வைக்கவும். (3 விரலளவு) 1முதல் 2 கிராம் இரண்டுவேளை தண்ணீர் அல்லது மோரில் அருந்த உஷ்ணவாயு, வயிற்றுளைவு, உப்புசம் தீரும்.

## நிணத்திற்கும், கரப்பானுக்கும் மருந்து

| | | | |
|---|---|---|---|
| (1) | கார்போக அரிசி | : | |
| | கஸ்தூரி மஞ்சள் | : | |
| | சிகப்புக் கோட்டம் | : | வகைக்கு¼ பலம் (8.7கிராம்) |
| | மிளகு | : | |
| | சாதிக்காய் | : | |
| | தகரை விதை | : | |

இவற்றைப் பழச்சாற்றிலரைத்து 200 மி.லி. தேங்காய் எண்ணெயில் குழப்பிக் காய்ச்சி வடித்துக் கரப்பான் மேல் 3 நாட்கள் பூசி, நான்காம் நாள் குளிக்க 18 வகையான கரப்பான்கள் தீரும்.

| | | | |
|---|---|---|---|
| (2) | நுணாப்பட்டை அரைத்த விழுது | – | விளாங்காயளவு |
| | நல்லெண்ணெய் | – | ½ சேர் (140 கிராம்) |

இவற்றைக் காய்ச்சி வடித்துக் கோழி இறகு கொண்டு தடவ, கரப்பான் பொரிந்து ஆறிவிடும்.

T. 15875



## காதுசெவிடு தீர

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | )( | 1 சேர்(280 கிராம்) |
| ஆடுதின்னாப்பாளை | )( | நாரத்தைகாய் அளவு |
| ஊமத்தை இலை | )( | நாரத்தைகாய் அளவு |
| மிளகு | )( | ½ பலம் (17.5 கிராம்) |
| தோலுரித்த முழுப்பூண்டு | )( | ½ பலம் (17.5 கிராம்) |

முன் சொன்ன மூன்று சரக்குகளை எண்ணெயில் குழப்பிக் கொள்ளவும். ஏனையவற்றைப் பின்னர் கலந்து கொண்டு காய்ச்சவும். மூக்குப் புண்ணுக்கு நசியமும் காசெடை உட்கொள்ளத் தரவும். 8 நாட்களுக்கு ஒருமுறை குளிக்க மண்டைக் கரப்பான் தீரும். வெட்டுக் காயத்திற்கு இந்த எண்ணெயைத் தடவிவர, காயம் ஆறிப்போகும். காதில் 2 முதல் 4 துளி விட்டு வர செவிடு தீரும்.

## சன்னிக்கு மாத்திரை

| | | |
|---|---|---|
| சுக்கு | )( | |
| திப்பிலி | )( | |
| மிளகு | )( | |
| இலவங்கம் | )( | |
| கருஞ்சீரகம் | )( | 1 வீசை (1.4 கி.கிராம்) |
| சாதிக்காய் | )( | |
| ஏலம் | )( | |
| சாதிபத்திரி | )( | |
| சுத்தித்தவாளம் | )( | |
| இலிங்கம் | )( | |

இவற்றைப் பழச்சாற்றிலரைத்துப் பயறளவுக்கு மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும். சுக்கு, கடுக்காய், கடுகுரோகிணி கஷாயத்தில் 2 மாத்திரைகள் வீதம் இருவேளை தரவும். குழந்தைகளுக்கு 1 மாத்திரை தரவும்.

## பேதிகட்ட மாத்திரை

| | | |
|---|---|---|
| கசகசா | )( | |
| அதிவிடையம் | )( | |
| கோரோசனை | )( | |
| ஓமம் | )( | சம எடை |
| சாதிக்காய் | )( | |
| இலவங்கம் | )( | |
| இலவம்பிசின் | )( | |

குப்பைமேனிச் சாற்றிலரைந்துக் குன்றிமணி அளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வட்டத்திருப்பிவேர் கஷாயத்தில் கொடுக்கவும்.

## புண்கள் தீர

ஒரு முழு பழஞ்சேலையில் சதுரக் கள்ளிப்பாலைத் தடவி காய வைக்கவும். உத்தாமணிப்பால், எருக்கம்பால் என்பவைகளையும் தடவிக் காய வைக்கவும். துணியைச் சுட்டு சாம்பலாக்கி, நல்லெண்ணெயில் சேர்த்துக் குழைத்து வைத்துக் கொண்டு தடவவும். ஆறாத புண்கள் எல்லாம் ஆறும்.

## நா வறட்சிக்கு மருந்து

| | | |
|---|---|---|
| அதிமதுரம் | )( | |
| சுக்கு | )( | சம எடை |
| கோட்டம் | )( | |
| வெங்காரம் | )( | |

இவற்றைப் பழச்சாற்றில் ஊறவைத்துச் சர்க்கரை தேன் சேர்த்து நாக்கில் தடவவும்.

## மார்புநோவு தீர உருண்டை

மண்டைஓட்டை எடுத்துக் கொண்டு, அதன் மேல் வல்லாரை இலையைக் கனமாக அரைத்துப் பூசவும். விரலளவுக் கனமாகக் கவசம் செய்து 20 எருவில் புடம் வைத்து எடுக்கவும். குப்பைமேனிச் சாற்றில் அரைத்து மிளகளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைக்கவும்.

| | | |
|---|---|---|
| வாயுவுக்கு | – | இஞ்சிச்சாறு |
| பித்தம் தீர | – | தேன் |
| கபம் தீர | – | நெய் |
| வாதசூலை தீர | – | வேப்ப இலைச்சாறு |
| விரைவாதம் தீர | – | வேப்பம்பட்டைச் சாறு |

இவைகளில் மாத்திரையை அனுபானித்துக் கொடுக்க மார்பு நோய் முதலிய பிணிகள் தீரும்.

## உதரவாயு தீர

| | | |
|---|---|---|
| வேளைச் சமூலம் | – | 1 படி (1.3 லிட்) |
| தண்ணீர் | – | 1 படி (1.3 லிட்) |

அடுப்பிலேற்றி, ஆழாக்காகக் காய்ச்சி எடுக்கவும். 30 முதல் 60 மி.லி. இருவேளை மூன்றுநாள் குடிக்க உதரவாயு தீரும்.

## மகோதரம் தீர

| | | |
|---|---|---|
| தும்மட்டிக்காய்ச் சாறு | – | ½ சேர் (140 கிராம்) |
| புளிக்கருணைக் கிழங்கு | – | 4 பலம் (140 கிராம்) |
| கோவைக்கிழங்கு | – | 4 பலம் (140 கிராம்) |
| வெங்காயம் | – | 4 பலம் (140 கிராம்) |

| | | |
|---|---|---|
| பூண்டு | – | 4 பலம் (140 கிராம்) |
| விளக்கெண்ணெய் | – | 1 படி (1.3 லிட்டர்) |

இவைகளைச் சமமாக இடித்துச் சாறு எடுத்து, கலந்து காய்ச்சி வேளைக்கு துட்டெடை கொடுக்க விருப்புருதி தீரும். 7 நாட்கள் பெண்கள் குடிக்க, மகப்பேறு உண்டாகும்.

## வாயு, பெருவயிறு தீர

| | | |
|---|---|---|
| துருவின தேங்காய்த் துருவல் | – | 4 தேங்காய் |
| நேர்வாளப்பருப்பு | – | 50 |

இவைகளை ஒரு பானையில் போட்டு (½ படி) 672 மி.லி வீதம் நீர்விட்டு மூடவும்; மூடிவேகவைத்து வாளப்பருப்பை பொறுக்கவும். பூவைப்பால் பிழிந்த அளவு (1 உழக்கு 336 மி.லி) தாய்ப்பால் (1 சேர் ) (250 கிராம்) கூட்டிக் காய்ச்சவும். இந்துப்பு ½ பலம் (17.5 கிராம்) சவுக்காரம் ½ பலம் (17.5 கிராம்) நேர்வாளப்பருப்பு சேர்த்தரைத்து காய்ந்துள்ள நெய்யில் பதமாகக் காய்ச்சி வடிக்கவும். காலையில் ஒரு காசு 488 மி.கி வீதம் உள்ளுக்குத்தர 4 அல்லது 5 முறை பேதியாகும். பின் இரசஞ்சோறு உண்ணவும். 8 நாட்கள் உண்ண மகோதரம், பெருவயிறு, குன்மக்கட்டி தீரும். இச்சா பத்தியம்.

## குன்மவாயு, வயிற்றுக்கட்டி தீர

| | | |
|---|---|---|
| அரப்பொடி | – | 1 பலம் (35 கிராம்) |
| இரசம் | – | ½ பலம் (17.5 கிராம்) |
| வீரம் | – | ½ பலம் (17.5 கிராம்) |
| நவச்சாரம் | – | ½ பலம் (17.5 கிராம்) |

இவற்றை ஆலம்பழம் போல் பதம் வரும்வரையில் அரைக்கவும்.

அடுப்பிலேற்றி, ஒரு விறகால் எரித்து சட்டி காய்ந்தபின் சூட்டில் இறக்கி வைத்து, மருந்தை சட்டியில் போட்டு வறுத்து ஆறியபின் 244 மி.கி தக்க அனுபானத்தில் கொடுக்கவும்.

**தீரும் நோய்:**

குன்மம், பெருவயிறு , மகோதரம், பாண்டு, காமாலை தீரும்.

## பித்த குன்மம் தீர

| | | |
|---|---|---|
| விளக்கெண்ணெய் | – | 1 சேர் (280 கிராம்) |
| பசும்பால் | – | ½ சேர் (140 கிராம்) |

கலந்து, தானியபுடத்தில் 8 நாட்கள் வைக்கவும். கொட்டைப்பாக்களவு காலை, மாலை 10 நாட்கள் குடிக்க வாதகுன்மம், பித்த குன்மம், வயிற்றுவலி தீரும்.

## மூக்கில் இரத்தம் வருவது தீர

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | – | சேர் (280 கிராம்) |
| காட்டு எலுமிச்சை | – | 1 சேர் (280 கிராம்) |
| பெருங்குருந்து சாறு | | |
| பூண்டு | – | 5 பலம் (170 கிராம்) |

இவற்றை எரித்துப் பதத்தில் ஒன்றுவிட்டு ஒருநாள் குளித்துவர இரத்தபீனிசம் தீரும்.

## சகல புண்ணும் தீர

| | | |
|---|---|---|
| பரங்கிப்பட்டைச் சூரணம் | – | 10 பலம் (350 கிராம்) |
| கோதுமை மாவு | – | 10 பலம் (350 கிராம்) |
| சுக்கு | )( | |
| மிளகு | )( | |

திப்பிலி )(
திப்பிலிமூலம் )( ½ பலம் (17.5 கிராம்)
சாதிக்காய் )(
செவ்வியம் )(
ஓமம் )(

இந்தக் கடைச் சரக்குகளை வறுத்துப் பொடி செய்து பின் இரண்டு சரக்குகளுடன் கலந்து கொள்ளவும். சதுரக்கள்ளியை ஒரு பானையில் போட்டு முழுகத் தண்ணீர் விடவும். அதன்மேல் வேடுகட்டவும். மேலே சூரணத்தைத் தனித்தனியாகப் போடவும். எரித்து, வெந்தபின்பு, எடுத்து நிழலில் உலர்த்தி, மூன்று தூளும் கலந்து, சமஎடை சர்க்கரை சேர்த்து 1 முதல் 2 கிராம் வீதம் இருவேளை உண்ணவும்.

## *சித்தர் ரகசியம்*

மேல்புறணி நீக்கியதும், துண்டுகளான

| | | | |
|---|---|---|---|
| 1. | இஞ்சி | – | 20 பலம் (700 கிராம்) |
| 2. | சோற்றுப்பு | – | 5 பலம் (170 கிராம்) |
| 3. | வளையலுப்பு | – | 2 பலம் (70 கிராம்) |
| 4. | எலுமிச்சைப் பழச்சாறு | – | ஆழாக்கு (168 மி.லி) |
| 5. | கருவேப்பிலைச் சாறு | – | ஆழாக்கு (168 மி.லி) |
| 6. | புதினாச்சாறு | – | ¼ ஆழாக்கு (42 மி.லி) |
| 7. | சீரகம் | – | 1 பலம் (35 கிராம்) |
| 8. | ஏலம் | – | 1 பலம் (35 கிராம்) |

ஒரு பாத்திரத்தில் மேற்படி சரக்குகளைப் போடவும். ஏலம், சீரகம் என்பவைகளை இடித்துத் தூள் செய்து கலந்து, நன்கு குலுக்கி 10 நாள் சூரிய ஒளியில் வைத்து, ஊறும்படி செய்து கொள்ளவும். நாள் ஒன்று இஞ்சித்துண்டு ஒன்று உண்ணவும். அசீரணம், வயிற்றுப்புசம், மந்தவாயு, பித்தவாயு, வாய் நீர்ஊறல் என்பன தீரும்.

## சூதகவாயு தீரக் கஷாயம்

பிரண்டையை கணுப்போக்கி உப்பு கூடச் சேர்த்து இடித்து வறுத்து சாம்பலாக்கவும். சீரகம் வெடிக்கவிட்டு புளித்தமோர் விட்டு கஷாயம் வைத்து 30 முதல் 60 மி.லி வீதம் 3 வேளை குடிக்கவும்.

## கீரிப்பூச்சி தீர மெழுகு

| | | |
|---|---|---|
| இந்துப்பு | )( | |
| வெடியுப்பு | )( | |
| கல்லுப்பு | )( | 1 பலம் (35 கிராம்) |
| வளையலுப்பு | )( | |
| நவச்சாரம் | )( | |
| நேர்வாளம் | – | 1 பலம் (35 கிராம்) |

நேர்வாளத்தை சுத்தி செய்து கொள்ளவும். எல்லா சரக்குகளையும் தேன் விட்டரைக்கவும். ஆளுக்கு தக்கபடி (பணவெடை) 488 மி.கி தர, கீரிப்பூச்சி, கிருமிகள், கூட்டோடுவிழும். உண்பதற்கு மோர், இரசம் தரவும்.

## வச்சிரவல்லி சூரணம்

| | | |
|---|---|---|
| பிரண்டைக்கிழங்கு | )( | |
| குரோசானி ஓமம் | )( | |
| சுக்கு | )( | ¼ பலம் (8.75 கிராம்) |
| திப்பிலி | )( | |
| மிளகு | )( | |

கடைச் சரக்குகளை நசுக்கிக் கூட்டி 7 எருக்கிலைக்குள் வைத்துத் தைத்துக்கட்டி 8 நாளைக்கு பூமியில் புதைத்து எடுத்து எடுத்துலர்த்திப் பிரண்டைக்கிழங்குடன் சூரணம் செய்யவும். 1 முதல் 2 கிராம் காலை, மாலை சூரணத்தை வெந்நீரில் உட்கொள்ளவும். அசீரணம், நீராம்பல்,

பித்தம், புளிஏப்பம், மார்புநோவு, பக்கசூலை, வாதசூலை, அக்னிமந்தம், உஷ்ணவாயு, மூலவாயு, மேகவாயு, பித்தவாயு, கர்ப்பவாயு தீரும். இச்சா பத்தியம்.

## குன்மம் தீர

கொப்பரைத் தேங்காயின் கண்திறந்து அதில் கல்லுப்பைப் பொடி செய்து மூடவும். 15 நாள் பூப்புடம் வைத்து, எடுத்து அரைக்கவும். 165 மி.லி வில்லை செய்து காலை, மாலை 15 நாட்கள் உண்ணவும். குன்மம் தீரும். வாய்க்கசப்பு, புளிப்பு தீரும்.

## நீர் இறங்க

| | | |
|---|---|---|
| ஆவாரம் பட்டை | – | 4 பலம் (140 கிராம்) |
| பசும்பால் | – | 1 படி (1.3 லிட்) |
| முசுமுசுகைச்சாறு | – | உழக்கு (336 மி.லி) |
| ஈரவெங்காயச்சாறு | – | உழக்கு (336 மி.லி) |
| வெங்காரம்(பொரித்தது) | – | 1 காசெடை(165 மி.கி) |

சட்டியில் ஆவாரம் பட்டையைப் போடவும். பசுவின் பால் விடவும். மூடி, சாறுகளை ஊற்றி, வெங்காரத்தைச் சேர்த்துக் கொதிக்கவைத்து வடிகட்டி 30 முதல் 60 மி.லி. வீதம் 3 பொழுது கொடுக்க மலசலம் இறங்கி நற்குணத்தைக் கொடுக்கும். கொடுத்துக் கைகண்டது.

## மாலைக்கண் தீர

வெள்ளாட்டு ஈரலை, நாவல் கொழுந்து போட்டு வேகவைக்கவும். 3 கண்டமாக அறுத்து, 3 நாட்கள் உண்ணவும்.

கழுதை என்பை நீரில் உரைத்து இரண்டொரு துளி 10 நாட்கள் போட கண் நன்கு தெரியும்.

## வீரிய விருத்திக்கு

| | | |
|---|---|---|
| பசும்பால் | – | 2 படி (2.6 லிட்) |
| வெங்காயம் | – | 1 வீசை(1.4 கி.கிராம்) |

வெங்காயத்தை மெல்லியதாக அரிந்து, சட்டியிலிட்டுப் பால்விட்டு வேகவிடவும். பால் சுண்டியபின் இறக்கிக் கடைந்து புன்னைக் காயளவு 20 நாள் உண்ணவும்.

## மருந்தால் வந்த சீதபேதி போக – குடிநீர்

| | | |
|---|---|---|
| நன்னாரிப்பட்டை | – | 1 பலம் (35 கிராம்) |
| கொத்தமல்லி | – | ¼ பலம் (8.75 கிராம்) |
| பனைவெல்லம் | | |

நன்னாரிப் பட்டையை வறுத்துக் கொள்ளவும். பின் மற்றவைகளுடன் சேர்த்து கியாழம் செய்யவும். உழக்கு (336 மி.லி.) பசும்பால் விட்டு 30 முதல் 60 மி.லி கியாழம்3 வேளை குடிக்கவும்.

## பேன் சாக

ஒரு வராகன் (3.5 கிராம்) இரசத்தை மேனிச்சாற்றில் மைபோல் அரைத்து நூலில் தடவி காயவைத்துக் கொண்டையில் முடிக்க, பேன் சாகும்.

## பிள்ளை பெறாமல் உள்ளவர்களுக்கு

கீழாநெல்லிவேர் சமூலத்தை வளையமாகச் சுற்றிச் சாம்பிராணி தூபம் காட்டி, பெண்ணின் இடக்கால் பெருவிரலில் மாட்டி வைக்கவும். உடன் பிள்ளை கீழேவிழும்.

பசுமுன்னையிலை வேரைப் பசும்பாலில் அரைத்துக் கொடுக்கவும்.

உத்தாமணி வேரைக் கழற்சிக்காய் அளவு அரைத்துப் பசும்பாலில் 1 முதல் 2 கிராம் கொடுக்கவும். இவைகள் பிறர் அறியாமல் இரகசியமாக இருக்க வேண்டும்.

## சுரம் தீர பற்பம்

மிளகரணையிலை ஒரு கொத்து அரைத்து மூசை பண்ணவும். முருக்கன் பட்டையைச் சுட்டு அதன் சாம்பல் பாதிபோட்டு நடுவில் தாளகம் வைத்து மேலே சாம்பல் போடவும். அழுத்தி இலையால் மூடி, சீலைமண் செய்து கோழிப்புடம் போட்டு எடுக்க பற்பமாகும். 15 முதல் 30 மி.கி. வரை இருவேளை கொடுக்க காய்ச்சல், நளிர்சுரம், ஈளை, இருமல் தீரும்.

## சிரங்கு தீர

| | | |
|---|---|---|
| விளக்கெண்ணெய் | – | 1 சேர் (280 கிராம்) |
| குப்பைமேனி | )( | |
| மணத்தக்காளி | )( | |
| முடக்கொத்தான் | )( | கொட்டைப்பாக்களவு |
| மூக்கிரட்டை | )( | |

குப்பைமேனி முதலிய நான்கையும் எண்ணெயில் கலந்து, குழப்பிக் காய்ச்சி வடித்து 1 தேக்கரண்டி வீதம் 5 நாட்கள் தரவும். சிரங்கு, பெருஞ்சிரங்கு, கரப்பான் தீரும்.

## சம்பீரத் தைலம்

| | | |
|---|---|---|
| பழச்சாறு | – | 1 படி (1.3 லிட்) |
| குன்றிமணி | – | 2 பலம் (70 கிராம்) |

| | | |
|---|---|---|
| சுக்கு | – | ½ பலம் ( 17.5 கிராம்) |
| காட்டரணைச்சாறு | – | ½ சேர் (140 கிராம்) |
| செங்கழுநீர் | – | ½ சேர் (140 கிராம்) |
| மைக்கொன்றைச்சாறு | – | ½ சேர் (140 கிராம்) |
| கடுகுரோகிணி | )( | |
| வசம்பு | )( | |
| செவ்வியம் | )( | |
| அதிமதுரம் | )( | |
| கோட்டம் | )( | ¼ பலம் (8.75 கிராம்) |
| இலுப்பைப்பூ | )( | |
| ஏலம் | )( | |
| வாய்விளங்கம் | )( | |
| சிற்றரத்தை | )( | |
| சதகுப்பை | )( | |
| மஞ்சள் | )( | |
| மரமஞ்சள் | )( | |
| நல்லெண்ணெய் | – | 1 படி (1.3 லிட்) |

இவற்றை இடித்துக் காய்ச்சி, பதத்தில் எடுத்தக் குளிக்கவும். தலையில் உள்ள நோய்கள் போகும். தலையில் தடவி 2 நாட்கள் ஊறவைக்கவும் பலன் தரும்.

## அமிர்தாமலகத்தைலம்

| | | |
|---|---|---|
| சீந்தில்ரசம் | )( | |
| நெல்லிக்காய்ரசம் | )( | |
| முசுமுசுக்கை ரசம் | )( | |
| கரிசாலைரசம் | )( | 1 சேர் (280 கிராம்) |
| தாழைமுளை ரசம் | )( | |
| கற்றாழை ரசம் | )( | |
| நல்லெண்ணெய் | – | 2 படி (2.6 லிட்) |
| பசுவின் பால் | – | 1 படி (1.3 லிட்) |
| அதிமதுரம் | – | |

| | | |
|---|---|---|
| ஏலம் | | |
| இலவங்கம் | | |
| இலவங்கப்பத்திரி | | |
| இலவங்கப்பட்டை | | |
| கோட்டம் | | |
| சாதிக்காய் | | |
| திராட்சைப்பழம் | | |
| சதகுப்பை | )( | |
| மஞ்சள் | )( | – ¼ பலம் (8.7 கிராம்) |
| மரமஞ்சள் | )( | |

இவற்றை இடித்துப் போட்டுக் காய்ச்சி, தலை குளிக்கத் தலை நடுக்கல் கிறுகிறுப்பு, தலைரோகம் தீரும்.

## தலைச்சுண்டு தீர

| | | |
|---|---|---|
| ஊமத்தைவிரை | – | 1 பலம் (35 கிராம்) |
| ஊமத்தைச் சாறு | – | 1 படி ( 1.3 லிட்) |
| நல்லெண்ணெய் | – | 1 படி (1.3 லிட்) |

ஊமத்தை விரையைச் சாற்றிலரைத்து எண்ணெயில் குழப்பிக் காய்ச்சி எடுத்து, தலையில் தடவி மறு நாள் குளிக்கவும். தலைச்சுண்டு, தலைப்பற்று தலை நமைச்சல் தீரும். உதிர்ந்தமயிர் மீண்டும் முளைக்கும்.

## இருமல் தீர இளகம்

| | | |
|---|---|---|
| ஆவின் பால் | – | 1 சேர் (280 கிராம்) |
| கையாந்தகரைச்சாறு | – | 1 சேர் (280 கிராம்) |
| சிவப்பு கரிசாலைச்சாறு | – | 1 சேர் (280 கிராம்) |
| சங்கம்பழச்சாறு | – | 1 சேர் (280 கிராம்) |
| நெய் | – | 1 சேர் (280 கிராம்) |

| | | |
|---|---|---|
| தேன் | )( | |
| சுக்கு | )( | |
| மிளகு | )( | ½ பலம் (17.5 கிராம்) |
| திப்பிலி | )( | |
| சிற்றரத்தை | )( | |

இவற்றை வறுத்து இடித்துச் சூரணமாக்கி இலேகியம் கிண்டி நெல்லிக்காயளவு 12 நாட்கள் உண்ண இருமல் தீரும்.

## கேசரஞ்சனத் தைலம்

| | | |
|---|---|---|
| கரிசாலைச்சாறு | – | 1 படி (1.3 லிட்) |
| நெல்லிக்காய்ச் சாறு | – | 1 படி (1.3 லிட்) |
| பால் | – | 1 சேர் ( 280 கிராம்) |
| அதிமதுரம் | – | 4 பலம் (140 கிராம்) |
| நல்லெண்ணெய் | – | 4 படி( 5.2 லிட்) |

இவற்றைக் காய்ச்சி, பதத்தில் எடுத்துக் குளிக்கவும். முடி கருத்து வளரும்.

## சீரகச் சூரணம்

| | | |
|---|---|---|
| சீரகம் | )( | |
| ஓரிலைத்தாமரை | )( | நிழலில் உலர்த்தி தூளாக்கவும் |
| நல்ல சந்தனம் | – | 1 பலம்( 35 கிராம்) |

முதலிரண்டையும் சந்தனத்துடன் சேர்த்திடித்துச் சூரணமாக்கவும். நெய்யில் அனுபானித்து (1 விரலளவு ) 1 முதல் 2 கிராம் வீதம் 10 நாட்கள் உண்ணவும். இருவேளை, நீர் சுருக்கு வெள்ளை, என்புருக்கி, எரிகுன்மம், மேகச்சூடு, நெஞ்சடைப்பு, வாய்நாற்றம் போகும்.

## மாலைக்கண் தீர (வேறு)

| | | |
|---|---|---|
| ஆண்டு மாறின பழம்புளி | )( | |
| ஆண்டு மாறின பனைவெல்லம் | )( | 1 பலம் ( 35 கிராம்) |
| சுண்ணாம்பு | – | 1/8 பலம் (4.37 கிராம்) |
| நல்லெண்ணெய் | – | 1 பலம் (35 கிராம்) |
| கோழியவரைச்சாறு | – | ½ பலம் (17.5 கிராம்) |

இவற்றைக் கூட்டிக் குழப்பி 1 முதல் 2 கிராம் வீதம் உண்ண மாலைக்கண் தீரும்.

## பிள்ளை உண்டாக

விளாம்பட்டையை அரைத்துத் தினம் நெல்லிக்காயளவு தூரம் வந்தது முதல் 3 நாளைக்கு வெந்நீரில் கொடுக்க ஆண்பிள்ளையும், கூழில் தரப் பெண் குழந்தையும் பிறக்கும்.

## மேனிச் சூரணம்

குப்பைமேனி சமூலம்
பசும்பால்

அரைத்து, நிழலில் உலர்த்திப் பொடி செய்து, சமஎடை கருஞ்சீரகம் வறுத்துப் பொடி செய்து கலக்கவும். (இரண்டு விரலளவு) 2 முதல் 4 கிராம் தூள் சர்க்கரையில் உண்ண மந்தம், அசீரணம் தீரும்.

## நரைமயிர் மாற

| | | |
|---|---|---|
| கருப்புப்பூலாச் சாறு | )( | |
| கருநாவல்பட்டைச்சாறு | )( | |
| கரிசலாங்கண்ணிச்சாறு | )( | 1 சேர் (280 கிராம்) |

| | | |
|---|---|---|
| தென்னம்பாளைச்சாறு | )( | |
| பாக்குப்பாளைச்சாறு | )( | |
| பசும்பால் | – | 1 சேர் (280 கிராம்) |
| நல்லெண்ணெய் | – | 1 சேர் (280 கிராம்) |
| பால்சாம்பிராணி | – | 1 பலம் (35 கிராம்) |

இவற்றைச் சேர்த்து, பக்குவமாகக் காய்ச்சி வடித்து 3 நாளைக்கு 1 தடவை தலைக்குத் தேய்த்து முழுக மயிர் கறுத்து சோடு சோடாய் முளைத்து வரும்.

## நன்னாரிச் சூரணம்

| | | |
|---|---|---|
| நன்னாரி வேர் | | |
| பசும்பால் | )( | |
| பரங்கிப்பட்டை | )( | |
| சுக்கு | )( | |
| திப்பிலி | )( | |
| மிளகு | )( | சம அளவு |
| ஏலம் | )( | |
| இலவங்கம் | )( | |
| இலவங்கப்பட்டை | )( | |
| இலவங்கப்பத்திரி | )( | |
| சிறுநாகப்பூ | )( | |
| கசகசா | )( | |
| சீரகம் | )( | |

நன்னாரியைப் பாலில் வேகவிட்டு உலர்த்தி ஏனைய சரக்குகளுடன் சூரணித்துச் சர்க்கரைச் சமமாகச் சேர்த்து (3 விரல்) 3 முதல் 6 கிராம் காலை மாலை உண்ணவும். பித்தரோகம், அழலை, வெள்ளோக்காளம் தீரும்.

## பல்லுறுதிக்கு

| | | |
|---|---|---|
| மருக்காரப்பட்டை | )( | |
| மருதம்பட்டை | )( | |
| வெள்வேலம்பட்டை | )( | |
| எருக்கன்பட்டை | )( | |
| ஆவாரம்பட்டை | )( | |

இவற்றைக் கருக்கிப் பல் துலக்கப் பயன்படுத்தவும்.

## தலைப் பொடுகுக்கு

| | | |
|---|---|---|
| விளக்கெண்ணெய் | – | 2 சேர் (560 கிராம்) |
| பழச்சாறு | – | 1 சேர் (280 கிராம்) |
| அதிமதுரம் | – | 1 பலம் (35 கிராம்) |
| கருஞ்சீரகம் | – | 1 பலம் (35 கிராம்) |
| தேவதாரக்கட்டை | – | ½ பலம் (17.5 கிராம்) |

இவற்றைப் பழச்சாறு விட்டரைத்து எண்ணெயில் குழப்பிக் காய்ச்சவும். மஞ்சள், தக்கோலம் ½ பலம் (17.5 கிராம்) பொடி செய்து போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து, 3 நாளைக்கு ஒருமுறை தலைக்குத் தேய்த்து ஊறவைத்து முழுகவும். தலைச் சூண்டு, தலைப்பொடுகு, மண்டைக்கரப்பான் தீரும்.

## சொறிசிரங்கு நமைச்சல்

ஆகாயத் தாமரையை உலர்த்தி அரைத்து 2 பலம் (70 கிராம் ) எடுத்துக் கொள்ளவும். அரிசிமாவு 4 பலம் (140 கிராம்) கூட்டி இடித்துப் புட்டு சுட்டு 3 நாட்கள் உண்ணவும்.

## காதுநோவு தீர

புன்னை மரத்துவேரை, புளித்தகாடித் தண்ணீரில் அரைத்து வடிகட்டி 4 துளி காதில் விட்டுப் பஞ்சால் மூடி வைக்கவும்.

செம்மறியாட்டு முன்னங்கால் என்பைப் புடமிட்டு வைக்கவும். அந்தப் பற்பத்தைப் பழச்சாற்றில் கலந்து 3 முதல் 4 துளி விட காதில் சீழும், வலியும் நீங்கும்.

## வீட்டுதூரமாகாதவர்களுக்கு

| | | | |
|---|---|---|---|
| (1) | மாவிலங்கம்பட்டை | )( | |
| | மிளகு | )( | அரைத்து |
| | பூண்டு | )( | கொட்டைப்பாக்களவு மூன்றுநாட்கள் விழுங்கவும். |
| (2) | மிளகு | – | ¼ பலம்(8.75 கிராம்) |
| | உரித்தபூண்டு | – | ¼ பலம்(8.75 கிராம்) |

இவற்றைச் செருப்படைச்சாற்றால் அரைத்துக் கொட்டைப் பாக்களவு நல்லெண்ணெயில் குழப்பி 3 நாட்கள் தர, சூதகம் வெளியாகும். சூதக வாயு, வயிற்றுவலி தீரும்.

## கீழாநெல்லித் தைலம்

| | | |
|---|---|---|
| கீழாநெல்லிச் சமூலம் | )( | வகைக்கு 8 படி(10.4 லிட்) |
| தண்ணீர் | )( | |

அந்நீர் ஒரு படியாகச் சுண்டக் காய்ச்சவும். நல்லெண்ணெய் 1 படி, (1.3 லிட்) 1 பலம் (35 கிராம்) கியாழத்தைக் கலந்து மெழுகுபதத்தில் காய்ச்சி, 4 நாளைக்கு ஒரு முறை குளித்துவரப் பித்தம், கிறுகிறுப்பு,

தலைசுற்றல், வாய்நீர் ஊறுதல், இரத்தபித்தம், பைத்தியம், நீர் மஞ்சள் போல் இறங்குதல், கை கால் எரிச்சல் தீரும்.

## சீரகத் தைலம்

| | | |
|---|---|---|
| சீரகம் | – | 1 படி (1.3 லிட்) |
| ஆற்றுநீர் | – | 8 படி (10.4 லிட்) |
| நல்லெண்ணெய் | – | 1 படி (1.3 லிட்) |
| கார்போக அரிசி | – | 2 பலம் (70 கிராம்) |

சீரகத்தைச் சற்று இடித்து ஆற்று நீரில் போட்டு 1 படியாக (1.3 லிட்) கஷாயம் வைக்கவும். கார்போக அரிசியைக் கஷாயத்தால் அரைத்துக் கலந்து எண்ணெயுடன் கூட்டி, அடுப்பிலேற்றி எரித்து மெழுகு பதத்தில் எடுக்கவும். 4 நாளைக்கு குளிக்கவும். பித்தம், கிறுகிறுப்பு, குன்மம், இரத்தவாந்தி வாதை, சோகை, பாண்டு, கபாலரோகம் தீரும்.

## நரம்புச் சிலந்தி தீர

| | | |
|---|---|---|
| சங்கம் வேர்ப்பட்டை | – | பாக்களவு |
| குட்டிவிளாவேர்ப்பட்டை | – | ½ பாக்களவு |

இவற்றை அரைத்து வெந்நீரில் கலந்து 7 நாள் குடிக்க, தொடைவீக்கம், விப்புருதி, நரம்புச்சிலந்தி, சட்டைக் கரப்பான் தீரும். 3 நாளுக்குப் பத்தியம்.

## வயிற்றுப்பிடுங்கல் தீர

| | | |
|---|---|---|
| பசும்பால் | )( | |
| எலுமிச்சை | )( | ஆழாக்கு (168 மி.லி.) |

உட்கொள்ளவும்.

## விக்கல் தீர

மயிலிறகைச் சுட்டு அதிமதுரம் திப்பிலியைச் சூரணித்து 1 முதல் 2 கிராம் தேனில் தர விக்கல் தீரும்.

## அண்டவாதம் தீர

| | | |
|---|---|---|
| பூண்டு | – | 4 பலம் (140 கிராம்) |
| முடக்கத்தான் இலை | – | 4 பலம் (140 கிராம்) |

இவற்றை அரைத்து விளக்கெண்ணெயில் காய்ச்சி 3 நாள் குடிக்கவும்.

## மாந்தைக்கு

| | | |
|---|---|---|
| இண்டு | )( | |
| கல்யாண முருக்கிலை | )( | |
| சங்கிலை | )( | |
| தூதுவளை | )( | |
| கரிசாலை | )( | வகைக்கு 3.5 கிராம் |
| கருஞ்சீரகம் | )( | |
| சிற்றரத்தை | )( | |
| சுக்கு | )( | |

இவற்றில் தண்ணீர் சேர்த்துக் கஷாயம் 39 முதல் 60 மி.லி. இருவேளை தர மாந்தம் தீரும்.

## காக்கை வலிப்பு தீர நசியம்

| | | |
|---|---|---|
| அகத்தி இலை | )( | |
| குப்பைமேனி | )( | வகைக்கு 1 கிராம் |

எடுத்துக் கசக்கி 3, 4 துளி நசியமிட காக்கை வலிப்புத் தீரும்.

## காதுகுடைச்சல் தீர

வெள்ளாட்டுப்பாலில் சங்கை அரைத்துக் கழற்சிக்காய் அளவு 3 நாள் தரவும்.

## வெள்ளை தீர

| | | |
|---|---|---|
| இலவம்பிசின் | – | 1 பலம் (35 கிராம்) |
| நீர்முள்ளி விரை | – | 1 பலம் ( 35 கிராம் |

இடித்துச் சூரணம் செய்து (வெருகடி) 1 முதல் 2 கிராம் சூரணம் வெண்ணெயில் கொள்ள வெள்ளை தீரும்.

## இருமல் தீர

| | | |
|---|---|---|
| நஞ்சு முறித்தான் பட்டை | – | 1 பலம்(35 கிராம்) |

இதனைப் பசுப்பாலில் அரைத்துப் பிழிந்து (1 பொட்டுக் கரண்டி) 1.33 மி.லி இருவேளை தரவும். இருமல், ஈளை, காசம் தீரும்.

## காது நோவு தீர (வேறு)

நிலப்பனைக் கிழங்கை நறுக்கி இடித்து நல்லெண்ணெயில் காய்ச்சி, 3 முதல் 4 துளி காதில் விடவும்.

## மாதவிடாய் வர

¼ படி (325 மி.லி) காடி நீரில் எருக்கம்பால் துளிவிட்டுத் தரவும்.

## பூ விழுந்த கண்ணுக்கு

தேங்காயைத் தாய்ப்பாலில் அரைத்துத் துணியில் தடவிக் காயவைத்து நெய்யில் நனைத்து விளக்குத் திரியில் எரியவைத்து சுடர் தைலம் வாங்கி ஆறியபின் கண்ணில் விடத் தீரும்.

## கை கால் எரிச்சல் தீர

| | | |
|---|---|---|
| தேன் | – | ¼ பலம் ( 8.75 கிராம்) |
| தாய்ப்பால் | – | ¼ பலம் (8.75 கிராம்) |

சேர்த்துத் தடவவும். வேளை 5 முதல் 10 மி.லி.

## பித்த மண்டைக் குடைச்சல் தீர

| | | |
|---|---|---|
| செண்பகமொக்கு | )( | |
| தேற்றாங்கொட்டை | )( | |
| சிறுநாகப்பூ | )( | |
| பெருங்காயம் | )( | |
| இலவங்கம் | )( | |
| கோட்டம் | )( | |
| அதிமதுரம் | )( | |
| சந்தனம் | )( | |
| ஏலம் | )( | ¼ பலம்(8.75 கிராம்) |
| இலவங்கப்பட்டை | )( | |
| சோம்பு | )( | |
| சீரகம் | )( | |

இவற்றைப் பொடி செய்து சம எடை சர்க்கரை சேர்த்து (3 விரலளவு) 3 முதல் 6 கிராம் இருவேளை உண்ணவும்.

## மஞ்சள் வெள்ளை தீர

| | | |
|---|---|---|
| பூவரசம்பட்டை | )( | சமஅளவு |
| பசும்பால் | )( | |

பட்டையை இடித்துப் பிழிந்து, கலந்து 10 முதல் 20 மி.லி. இருவேளை 3 நாள் குடிக்கவும்.

## மூலம் தீர

| | | |
|---|---|---|
| கஞ்சா இலை | )( | சம அளவு |
| வெங்காயம் | )( | |

இவற்றை நல்லெண்ணெய் விட்டு வறுத்துக்கட்ட வெளிமூலம், உள்ளடங்கிப்போகும். 6 வேளை கட்டவும்.

## நளிர் காய்ச்சல் தீர

| | | |
|---|---|---|
| உத்தாமணி இலை | )( | |
| மிளகு | )( | |
| பூண்டு | )( | சம எடை |
| இலவங்கம் | )( | |

இவற்றை அரைத்துக் கொட்டைப் பாக்களவு சுரம் வரும்போது 3 நாட்கள் தரவும்.

## இரத்தபேதி தீர

| | | |
|---|---|---|
| வெந்தயம் | – | ¼ பலம் (8.75 கிராம்) |

இதனைப் பொடிசெய்து பசும்பாலில் விழுங்க இரத்தபேதி 3 நாளைக்குள் குணமாகும்.

## வறட்டு சூலை தீர

| | | |
|---|---|---|
| ஆதண்டைப் பட்டைச் சாறு | – | 8.75 கிராம் |
| மிளகு | – | ¼ பலம்(8.75 கிராம்) |
| பூண்டு | – | ½ பலம் (17.5 கிராம்) |

இவற்றை அரைத்து, ஆழாக்கு (168 மி.லி.) சாற்றில் 30 முதல் 60 மி.லி. குடிக்கவும்.

## பல்வலி தீர

மிளகு ¼ பலம் (8.75 கிராம்) எடுத்து சாம்பல் ஆக்கி, ஓமம் ¼ பலம் (8.75 கிராம்) வெடிக்கவிட்டுக் கஷாயம் வைக்கவும். கற்பூரத்தைக் கொளுத்திப் போட்டுக் கொப்பளிக்க பல்வலி தீரும்.

## கண் எரிச்சல் தீர

மிளகு ¼ பலம் (8.75 கிராம்) பசும்பாலில் அரைத்து 350 மி.லி. நல்லெண்ணெயில் இட்டுக் காய்ச்சி எடுத்துக் குளிக்கவும்.

## பல்கிட்டிய சன்னி தீர

நாக்குப்பூச்சி ஒரு கொத்து சாம்பலாக்கியது எடுத்து ½ படி (650 மி.லி) தாய்ப்பாலில் போட்டு முறித்து 30 முதல் 60 மி.லி. குடிக்க சன்னி தோடம் தீரும்.

## குழந்தைகளுக்கு செவ்வாப்பு தீர

| | | |
|---|---|---|
| தூதுவளைவேர் | )( | |
| கிளாவேர் | )( | வகைக்கு 5 கிராம் |

நசுக்கி 250 மி.லி. எண்ணெயில் காய்ச்சி வடித்துத் தடவவும்.

## நீர்க்கட்டு தீர

| | | |
|---|---|---|
| நெருஞ்சில் | )( | |
| வரட்பூலா | )( | |
| செப்புநெருஞ்சில் | )( | வகைக்கு 1 கிராம் |
| சிறுகீரை | )( | |

இவற்றைப் பச்சை அரிசிக் கழுநீர் விட்டு அரைத்துக் கொடுக்கத் தீரும்.

## தாய்ப்பால் சுரக்க

| | | |
|---|---|---|
| அமுக்கராகிழங்கு | )( | சம அளவு |
| எட்டிக் கொட்டைப் பருப்பு | )( | |

இவற்றை நீர் விட்டு அரைத்து மார்பில் காம்பை நீக்கி மற்ற இடங்களில் பூசப் பால் சுரக்கும். பால் கொடுக்குமுன் மார்பை நன்கு கழுவி விட வேண்டும்.

## திமிர் குட்டம் தீர

| | | |
|---|---|---|
| விளக்கெண்ணெய் | )( | 1 படி (1.3 லிட்) |
| கோவைக் கிழங்கு இரசம் | )( | |
| பளிங்கு சாம்பிராணி | – | 5 பலம் (175 கிராம்) |

இவற்றைப் பொடி செய்து போட்டு வேளைக்கு ½ பலம் சாப்பிட, திமிர் குட்டம், அண்டவாதம், ஆனைக்கால் வாதம் தீரும்.

## இருமல் தீர (வேறு)

| | |
|---|---|
| கரிசாலை வேர் | – 2 பலம் (70 கிராம்) |
| மிளகு | – ¼ பலம் (8.75 கிராம்) |

இவற்றை முடிச்சுக்கட்டி, 2 படி (2.6 லிட்) நீரில் போட்டுச் குடிநீரிட்டு 2வேளை 30 முதல் 60 மி.லி. கொடுக்கவும்.

## பித்தம் தீர

நரிப்பயிற்றம் வேரை இடித்துச் சூரணம் செய்து (3 விரலளவு) 3 முதல் 6 கிராம் உண்ணவும் நெய்யில். தாகம், பித்த விகாரம் தீரும்.

## மார்பு வலி தீர

நெருஞ்சிவேரை வெள்ளாட்டுப் பாலிலரைத்துக் குழப்பி 1 முதல் 2 தேக்கரண்டி தரவும்.

## காசநோய் தீர

4.35

அவுரி வேர் 1/8 பலம் (435 கிராம்) அரைத்துப் பசும்பாலில் நீர்விட்டு கலந்து ஒரு நாளைக்கு 2 வேளை குடிக்கவும்.

## இரத்தகாசம் தீர

வெள்ளைக் குங்கிலியம் பொடி செய்து 100 முதல் 300 மி.கி. பசுவெண்ணெயில் குழப்பி 2 வேளை 3 நாள் அருந்த இரத்த காசம் தீரும்.

## வெள்ளை தீர (வேறு)

முற்றின கோவை வேர் )(
நல்ல சந்தனம் )(

இவற்றை இடித்துக் கொட்டைப் பாக்களவு அரைத்து மோரில் குடிக்கவும்.

## காமாலை தீர

நாயுருவி வேர் )(
கோரோசனை )( 1 கிராம்(8. 75 கிராம்)

முள்ளிப்பழச்சாறு, தயிர் மேல்நீர் இவைகளைத் தனித் தனியாகவிட்டு அரைத்துக் கண்ணிலிட மஞ்சள் நிறம் மாறும்.

## சிரங்கு தீர (வேறு)

கோவைக்கொடி, இலை துவைத்து 3 நாள் 5 முதல் 10 மி.லி. குடிக்க பெருஞ்சிரங்கு. நமைச்சல் தீரும்.

## எலிக்கடி தீர

வடக்கில் போகும
நாரத்தை மரவேர் )(
மிளகு )( சம அளவு
பூண்டு )(

இவற்றை அரைத்து வெந்நீரில் 1 முதல் 2 கிராம் இருவேளை 3 நாட்கள் உண்ண எலிக்கடி நஞ்சு தீரும்.

## உடல் வன்மையாக

நிலவாரை சமூலச் சூரணம் (3 விரலளவு) 3 முதல் 6 கிராம் நெய்யில் உண்ணவும்.

## உறக்கம் வராதவர்களுக்கு

| | | |
|---|---|---|
| அதிமதுரம் | )( | |
| கூகைநீர் | )( | ¼ பலம் (8.75 கிராம்) |
| இலுப்பைப்பூ | )( | |

பொடி செய்து சர்க்கரை சேர்த்து வேளைக்கு 1 முதல் 2 கிராம் உண்ணவும்.

## மஞ்சள் காமாலை போக

பளிங்கு சாம்பிராணியை கழற்சிக்காயளவு மோரில் ஊற வைக்கவும். தேங்காயைக் கொட்டைப் பாக்களவு அரைத்து, தேத்தாங் கொட்டையளவு உள்ளே சாம்பிராணியை வைத்துண்ணத் தீரும்.

## பெரும்பாடு தீர

| | | |
|---|---|---|
| சந்தனம் | )( | |
| சங்கம்வேர்ப்பட்டை | )( | சம அளவு |
| பசுவெண்ணெய் | )( | |

இவற்றைக் கலந்து அரைத்து வேளைக்கு 1 முதல் 2 கிராம் தர உதிரம் நிற்கும்.

## நீரடைப்புத் தீர

முருங்கைப்பூவை எலுமிச்சையளவு அரைத்து எருமை மோரில் குழப்பித்தர, கல்விழுந்து நீர் இறங்கும்.

## காதில் சீழ் வடிவதற்கு

| | | |
|---|---|---|
| சித்திரமூலம் | )( | |
| பிரண்டை | )( | சம அளவு |

இவற்றை நசுக்கி வெள்ளாட்டுக் கோமயத்தில் வேகவைத்துக் காதில் ஊற்ற சீழ்மாறி, இரணம் ஆறும்.

## பித்த மயக்கம் மாற

ஒரு எலுமிச்சை பழத்தை நான்காகப் பிளந்து ஒருபக்கம் சுக்குத்தூள், ஒரு பக்கம் சீரகத்தூள்; ஒரு பக்கம் சர்க்கரை, ஒரு பக்கம் சுண்ணாம்பு வைத்துக் கட்டி, பனிப்புடம் வைத்து சாறு பிழிந்து 3 நாள், 3 பழம் சாப்பிடவும்.

## நீர்க்கட்டுக்கு

தேத்தாங்கொட்டையைப் பாலில் ஊறவைத்து அரைத்து 1 முதல் 2கிராம் இளநீரில் குழப்பித்தரவும்.

## நீர்க்கட்டு ஏற்பட

ஆவாரை சமூலம் இடித்துப் பொடி செய்து 1 முதல் 2 கிராம் இருவேளை தேனில் உண்ணவும்.

## மேகம் தீர

| | | |
|---|---|---|
| வெள்ளருகு | – | 2 பலம்(70 கிராம்) |
| கொட்டைக்கரந்தை | – | 1 பலம்(35 கிராம்) |

| | | |
|---|---|---|
| கரிசாலை | – | ½ பலம் (17.5 கிராம்) |
| ஓமம் | – | ½ பலம் (17.5 கிராம்) |
| கருஞ்சீரகம் | – | ½ பலம் (17.5 கிராம்) |

இவற்றைச் சூரணம் செய்து 1 முதல் 2 கிராம் நன்னீரில் உட்கொள்ளவும். பால் சாதம் உண்ணவும். வெள்ளைப்புண், அரையாப்பு தீரும்.

## கல்லடைப்பு நீர்க்கட்டு தீர

பசுப்பாலில் முருங்கைப்பிஞ்சை அரைத்துக் குழப்பி 5 முதல் 10 கிராம் 3 நாட்கள் குடிக்க கல்விழும்.

## பெருமூத்திரம் தீர

தாமரைக் கொடியை மோர்விட்டு நல்லெண்ணெயில் மெழுகு பதமாய்க் காய்ச்சி 5 முதல் 10 மி.லி. இருவேளை குடிக்கத் தீரும்.

## காசம் தீர

| | | |
|---|---|---|
| இலவங்கம் | – | ¼ பலம் (8.75 கிராம்) |
| ஏலம் | – | ½ பலம் (17.5 கிராம்) |
| திப்பிலி | – | 2 பலம் (70 கிராம்) |
| கூகைநீர் | – | 2 பலம்(70 கிராம்) |
| அதிமதுரம் | – | 4 பலம்(140 கிராம்) |
| சர்க்கரை | – | 4 பலம் (140 கிராம்) |

இவற்றைச் சூரணம் செய்து சர்க்கரை சேர்த்து 1 முதல் 2 கிராம் பசும்பாலில் குடிக்கத் தீரும்.

## வெள்ளோக்காளம் தீர

| | | |
|---|---|---|
| நாய்வேளை இலை | )( | சம எடை |
| அவுரி வேர் | )( | |

இவற்றை அரைத்துப் புளியங்கொட்டை அளவு வெந்நீரில் தரவும்.

## (வேறு)

| | |
|---|---|
| பச்சைப்பனை இலை | )( |
| வில்வவேர் | )( |

இவற்றைக் கஷாயம் வைத்து 30 முதல் 60 மி.லி. 3 வேளை தர வெள்ளோக்காளம், வாந்தி தீரும்.

## கர்ப்பம் உண்டாக

| | | |
|---|---|---|
| கீழாநெல்லி இலை | )( | |
| விடதாரி இலை | )( | ¼ பலம் (8.75 கிராம்) |
| அம்மான் பச்சரிசி இலை | )( | |

இவற்றைப் பசுப்பால் விட்டரைத்து 10 மி.லி. பாலில் குழப்பிக் குடிக்கவும். தூரம் வந்தது முதல் 3 நாட்கள் குடிக்க, மகப்பேறு உண்டாகும்.

## இஞ்சிக் கசாயம்

இஞ்சியை மேல்தோல் சீவி, வில்லை வில்லையாக நறுக்கி, தேன்விட்டு வறுத்துக் கசாயம் செய்து 30 முதல் 60 மி.லி காலை, மாலை தர, காய்ச்சல், அழலை, தாக பித்தம், அன்னதுவேஷம் தீரும்.

## சொட்டுநீர் தீர

| | | |
|---|---|---|
| ஆனை நெருஞ்சில் | )( | |
| முள்எலிப்புழுக்கை | )( | சம அளவு |
| வெள்ளரிவிதை | )( | |

இவற்றை அரைத்து 1 முதல் 2 கிராம் வரை வெந்நீரில் தர, துளி துளியாக விழும் சொட்டு நீர் 3 நாளில் தீரும்.

## இசிவு சன்னி தீர

| | | |
|---|---|---|
| பளிங்கு சாம்பிராணி | – | ¼ பலம்(8.75 கிராம்) |
| வசம்பு | – | 1/8 பலம் (4.37கிராம்) |
| பூண்டு | – | 2 பலம் (70 கிராம்) |
| இவற்றைத் தைலமிறக்கவும். இதனுடன், | | |
| வேப்பெண்ணெய் | – | 1 சேர் (280 கிராம்) |
| முட்டைத்தைலம் சேர்த்து | – | 1 சேர்(280 கிராம்) |

இவற்றுடன் வசம்பு, சாம்பிராணி, கற்பூரம் பொடி செய்து போட்டுக் காய்ச்சி சீசாவில் வைத்து இசிவு கண்ட நரம்பெல்லாம் தடவி ஒத்தடம் போட வாதசன்னி, பித்த சன்னி, இசிவு சன்னி தீரும்.

## பீனிசத்திற்கு

| | | |
|---|---|---|
| மாதுளம் பூ | )( | |
| எருக்கம் பூ | )( | ¼ பலம்(8,75 கிராம்) |
| குங்குமப்பூ | )( | |

இவற்றைத் தாய்ப்பாலில் அரைத்து மாத்திரை செய்து, உலர்த்தி வைத்துக் கொண்டு பாலில் இழைத்து நசியம் பண்ண பீனிசம் 7 வகையும் தீரும்.

## புண் தீர

| | | |
|---|---|---|
| பூண்டு | )( | துட்டெடை (165 மி.கிராம்) |
| மிளகு | )( | |

இவற்றைக் கல்யாண முருங்கைச் சாற்றில் அரைத்து, துட்டெடை நல்லெண்ணெயில் குழப்பி, 5 நாட்கள் கொடுக்க, எப்படிப்பட்ட புண்ணும் ஆறும்.

## அரையாப்பு தீர

| | | | |
|---|---|---|---|
| (1) | நத்தைச்சூரி | – | எலுமிச்சையளவு |
| | நல்லெண்ணெய் | – | 165 மி.கிராம் |

இவற்றை குழப்பித்தரத் தீரும்.

(2) ஊமத்தன் தண்டைச் சுட்டு விளக்கெண்ணெயில் குழப்பிக் கட்டியில் போடக் கரையும்.

| | | | |
|---|---|---|---|
| (3) | சித்திர மூலப்பட்டை | – | 1 பலம்(35 கிராம்) |
| | கழற்சிப்பருப்பு | – | 1 பலம்(35 கிராம்) |
| | விளக்கெண்ணெய் | – | 2 சேர்(560 கிராம்) |

இவற்றை அரைத்துக் காய்ச்சி ஒரு தேக்கரண்டி வீதம் 2 வேளை 5 நாட்கள் கொடுக்க அரையாப்பு அற்றுப்போகும்.

## அக்கிக்கு மருந்து

கோழியவரை இலையைச் சாறெடுத்து ஒரு பீங்கானில் ஊற்றி வெயில்ல வைத்துக் கோழி இறகால் அக்கியில் தடவக் குணமாகும். கை கண்டது.

## பொதுக் கடிக்கு

| | | |
|---|---|---|
| பேய்க்குமட்டிச் சாறு | – | உழக்கு (336 மி.லி) |
| நல்லெண்ணெய் | – | உழக்கு (336 மி.லி) |

இவற்றைக் கலந்து கொண்டு சூரியபுடம் வைத்துத் தடவத் தீரும்.

## கக்குவான் தீர

| | | |
|---|---|---|
| தூதுவளைச் சாறு | – | 1 படி (1.3 லிட்) |
| ஆவின் பால் | – | 1 படி(1.3 லிட்) |
| கோட்டம் | – | 1 வீசை(1.3 கி.கிராம்) |

இவற்றுள் முதலிரண்டையும் சமமாகக் கலந்து, கோட்டத்தைத் தட்டிப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி 3 முதல் 5 மி.லி. கொடுக்கத் தீரும்.

மயிலிறகுச் சாம்பல், மிளகுச் சாம்பல் சமமாய்ப் போட்டு 3 முதல் 5 மி.லி. ஆவின் நெய்யில் மத்தித்துக் கொடுக்கத் தீரும்.

## குழந்தையின் மலசலக்கட்டுக்கு

| | | |
|---|---|---|
| இலைக்கள்ளி வேர்ப்பட்டை | – | 5 பலம் (175 கிராம்) |
| மிளகு | )( | 5 பலம் (175 கிராம்) |
| பூண்டு | ) | (5 பலம் (175 கிராம்) |
| சுக்கு | )( | 5 பலம் (175 கிராம்) |
| கடுக்காய் | )( | 5 பலம் (175 கிராம்) |

இவற்றைக் காயவைத்துப் பொடி செய்து வடிகட்டிக் குழந்தைகளின் வலிமை அறிந்து தாய்ப்பால் அல்லது வெந்நீரில் காசெடை $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ கிராம் வரை உள்ளுக்குத் தரத் தீரும்.

## மூச்சடைப்புத் தீர

தேனில் பூமி சர்க்கரைக் கிழங்கை அரைத்து 1 முதல் 2 கிராம் 2 வேளை உண்ணக் கொடுக்க மூச்சடைப்புத் தீரும். மாறாமல் குணமாகும்.

## ஆறாத மேக இரணம் தீர

மாதவிடாய் தீட்டுச் சீலையைக் கருக்கி அதை இரணத்தில் பூச வேண்டும். குணமாகும்.

## பீனிசம் தீர

| | | |
|---|---|---|
| சுக்கு | )( | |
| அரத்தை | )( | சம அளவு |
| சதகுப்பை | )( | |
| மிளகாய் | )( | |

இவற்றை ஒன்றாக நசுக்கி, 350 மி.லி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்து வாரம் இருமுறை தலைக்குத் தேய்த்துக் குளிக்கவும்.

## தலைவலிக்குப் பற்று

கறிக்குப் போடும் கருவாய் பட்டை ¼ பலம் (8.75 கிராம்) எடுத்து சோறு வடித்த கஞ்சித் தண்ணீர் விட்டரைத்து, தலைக்குப் பற்றுப் போடவும். தலைவலி நீங்கும். சுரமிருந்தாலும் போடலாம்.

## மூக்குப்புண் தீர

கரியபோளம் )( சம எடை
சுரை விரை )(

இவற்றை நீர்விட்டு அரைத்து 4, 5 தடவைத் தடவத் தீரும்.

தாமரைக் கொட்டையைச் சுட்டுச் சாம்பலைத் தடவினாலும் புண் ஆறும்.

## காதிரைச்சல் தீர

சுக்கைப் பாலில் இழைத்துக் காதைச் சுற்றி 3, 4 தடவை பற்றுப் போடவும்.

பலகறையைச் சுட்டு நுணுக்கிக் காதில் போட்டு 5 துளி எலுமிச்சம்பழம் சாற்றை 3, 4 முறை காதில் விடவும்.

சுரணையற்ற இடங்களில் தடவ அக்கிரகாரத்தைத் தைலமிறக்கிப் பூசி வரவும்.

## அரையாப்புக் கட்டி தீர

எலியாமணக்கு இலையைக் காடிவிட்டு வதக்கி ஆறுகட்டுக் கட்டினாலும்.

வேளையிலையைக் கசக்கி ஒடுவைத்து 2 மணி நேரம் ஒமம், கொப்பரைத் தேங்காய், கருவங்கத்தகடு மூன்றும் சரி எடையாக இடித்து மேலே ஒடுவைத்துக் கட்டினாலும்,

நீர்ப்பூலா இலையும் மிளகும் அரைத்து 3 நாட்கள் தடவினாலும் தீரும்.

## பிளவை

எலியாமணக்கு இலையைச் சிறுநீரில் அவித்துக் கட்டினால் தீரும்.

## உண்ணாக்கு வளர்ச்சி தீர

மணத்தக்காளி கியாழம் செய்து 30 முதல் 60 மி.லி.வீதம் காலை, மாலை 5 பொழுது குடிக்கவும். நாயுருவியைக் கியாழம் செய்து குடிக்கவும் தீரும்.

## பவுத்திரம் தீர

கரியபோளமும், மக்கிப்போன ஆட்டெலும்பு, மாவும் சரிஎடைக்கு எடுத்து இரவு 5, 6 கட்டுக் கட்டவும்.

## பல்வலி தீரப் பற்பொடி

சோற்றுப்பை எருக்கம்பால் விட்டரைத்து செம்மையாய் காய வைத்துக் கொள்ளவும். 10 வரட்டியில் புடமிடவும். கொட்டாங்கச்சிக் கரியை 4 பங்கு எடுத்து மேற்படி தூளுடன் கலக்கவும். இத்துடன் சுக்கு, காசுக்கட்டி, இந்துப்பு, கடுக்காய் வகைக்கு 1பலம் (35 கிராம்) வீதம் சேர்க்கலாம். இதனால் பல் விளக்கி வரவும்.

## நரம்புச் சிலந்தி தீர (வேறு)

பூவன் வாழைப்பழத்தில் சிறிது பெருங்காயம் வைத்து 8 நாட்கள் உண்ணவும்.

விழுதி இலையை வதக்கி வைத்துக் கட்டத் தீரும்.

## பெண் பூப்படைய

ஒரு கொட்டைப் பாக்களவு மேனிவேர்த்தோலைப் பசும் பாலிலரைத்து, பாலில் விட்டு மூன்று நாட்கள் அருந்தவும்.

## வெண் குட்டம் தீர

| | | |
|---|---|---|
| வாகை விரை | – | 6 படி (7.8 லிட்) |
| கந்தகம் | – | 3 பலம்(105 கிராம்) |

இவற்றைப் பானையில் போட்டுப் பூப்புடத்தில் தைலம் எடுக்கவும். தைலத்தை சீலையில் தடவிக் கட்டவும். 5 முதல் 10 துளி உள்ளுக்கும் 1 மண்டலம் (48 நாட்கள்) உண்ணவும். வெண்குட்டம், கருங்குட்டம் தீரும். உப்பு புளி கூடாது.

## சொறிசிரங்கு பட்சவாதம் தீர

| | | |
|---|---|---|
| ஊத்தின எண்ணெய் | – | 5 சேர்(1.4 கி.கிராம்) |
| இரசம் | – | 1 தோலா(12 கிராம்) |
| இரச செந்தூரம் | – | 1சேர்(280 கிராம்) |
| பூரம் | – | 1 சேர்(280 கிராம்) |
| இலிங்கம் | -- | 1 சேர்(280 கிராம்) |
| சுத்தித்த நேர்வாளம் | – | 2 தோலா(24 கிராம்) |

இவற்றைச் சிவப்புப்பூப் பருத்தி இலையில் மைபோல் அரைத்து, விளாங்காயளவு எடுத்து எண்ணெயில் கலக்கவும். சூரியபுடம் 3 நாட்கள் வைக்கவும். ½ முதல் 1 தேக்கரண்டி மூன்றுவேளை மூன்று, நான்கு நாட்கள் குடிக்கத் தரவும். சிரங்கு, கட்டி புண், பட்சவாதம் என்பன தீரும். ரொட்டி, கறி உண்ணலாம்.

## விடபேதியில் வாந்தி கண்டால்

வெண்பூசணியில் சுண்ணாம்பு தடவிப் பின் சட்டியில் பரப்பி, எரிக்கவும். பற்பமானவுடன் சிறிது ஓமம் போடவும். பொரிந்தவுடன் ½ படி(650 மி.லி) நீர்விட்டு ¼ படியாகக் (325 மி.லி) குறுக்கி, இறக்கிக் கொள்ளவும். 30 முதல் 60 மி.லி. கியாழத்தை 2 வேளைக் குடிக்க வாந்தி, வயிற்றுவலி தீரும்.

## நீர்க்கட்டு, கல்லடைப்பு உடன்தீர

தேங்காய்ப்பாலைச் சமமாய் பிழிந்து ஒரு பாத்திரத்தில் விடவும். பாணியை (வெல்லப்பாகு) முழுமையும்விட்டு ஒரு சாமம் சென்று 30 முதல் 60 மி.லி பருக. நீரடைப்பு உடனே தீரும்.

## கண்ணோய் தொண்ணூற்றாறும் தீர

| | | |
|---|---|---|
| சிற்றாமணக்கு பருப்பு | – | 1 எடை |

இதைக் கல்வத்திலிட்டுத் தேன்விட்டு 4 சாமம் அரைத்து 1 முதல் 2 துளி 3 நாட்கள் 2 வேளை இட வெள்ளையாக நீர் வரும். கண் உறுத்தும் சாமநேரம் கண் சிவப்புக் காணும், மூன்று நாட்கள் கழித்து நோய் தீரும். அந்தி மாலை, கண் புகைச்சல், பூ, படலம் என்ற நோய்கள் தீரும்.

## தித்திப்புக் களிம்பு

| | | |
|---|---|---|
| இரஸ்தாளிப்பழம் | – | 45 கிராம் |
| கொடிமுந்திரிப்பழம் | – | 45 கிராம் |
| கற்கண்டு | – | 45 கிராம் |
| ஓமம் | )( | |

| | | |
|---|---|---|
| சுக்கு | )( | – 2 வீசை (2.8 கிலோ) |
| மிளகு | )( | |
| கடுகுரோகிணி | – | 4 கிராம் |
| பசுநெய் | – | 4 கிராம் |
| வாளம் | – | 4 கிராம் |
| கடுகுநெய் | – | 4 கிராம் |
| தேன் | – | 4 கிராம் |

இவற்றை எல்லாம் சேர்த்து 4 சாமம் அரைத்துக் காசெடை எவ்வகை உணவிலும் உண்ணப் பேதியாகும். அதிகப்பட்டால் கஞ்சிச் சோறு உண்ண நிற்கும்.

## பேதிக்கு

தேங்காய் எண்ணெய் 1/8 படி (162 மி.லி)

கொப்பரைத் தேங்காய்ப்பாலில் சுத்தி செய்த 4 நேர்வாளப்பருப்பை அரைக்கவும். பின் கலந்து சிறு தீயாய் எரித்து எடுக்கவும். ஒரு சொட்டு நீராகாரத்தில் விட்டுத்தர, ஒருமுறை பேதியாகும். எத்தனை துளி விட, அத்தனை தடவை பேதியாகும். மோர்ச் சோறு உண்ண நிற்கும்.

சூப்பு சோறு உண்ணவும். மாலை இரசம் சோறு உண்ணவும்.

## பிள்ளைகளுக்கு கக்குவான், இரைப்பு தீர

பூநாகத்தைப் பாலில் சுத்தி செய்யவும். அடுப்பேற்றி வறுத்துச் சாம்பலாக்கவும். பசுவெண்ணெய் போட்டுக் கலக்கவும். சற்று சூட்டுடன் இறக்கி, பசுவெண்ணெய் போட்டுக் கலந்து உட்கொள்ளத் தரவும். விலாவிலும் தடவவும். இருவேளை (1 முதல் 2 குன்றி ) 130 மி.கி. முதல் 260 மி.கி. 3 நாட்கள் 4 நாளைக்குள் தீரும்.

## கண்புகைச்சல் தீர

| | | |
|---|---|---|
| கையான்சாறு | – | 1 சேர் (280 கிராம்) |
| நல்லெண்ணெய் | – | 1 சேர் (280 கிராம்) |
| இலந்தைக் கொழுந்து கற்கம் | – | விளாங்காய் அளவு |
| அதிமதுரம் | – | 1 வீசை (2.8 கி. கிராம்) |
| மிளகு | – | 2 வீசை (2.8 கி.கிராம்) |
| சீரகம் | – | 2 வீசை (2.8 கி.கிராம்) |

இவற்றைப் பால்விட்டரைத்துக் குழப்பி மெழுகு பதமாகக் காய்ச்சி இறக்கிக் குளிக்கவும். சீயக்காய் தேய்த்துக் குளிக்கவும். கண் புகைச்சல், நீர்வடிதல், 96 கண் பிணிகளும் தலை நோயும் தீரும்.

## முறை சுரம் தீரக் கஷாயம்

| | | |
|---|---|---|
| சிறுநாகப்பூ | )( | |
| சாம்பிராணி | )( | சம அளவு |
| கொம்பரக்கு | )( | |

இவற்றைப் பொரிபட நீர்விட்டு கசாயம் செய்து 1/8 படி (162 மி.லி) இறக்கி நாள்தோறும் கலக்கி 2 வேளை வீதம் 3 நாளைக்குத் தர, 3ஆம் முறை, 4ஆம்முறை சுரம் தீரும்.

## சுரம் தீர மாத்திரை

| | | |
|---|---|---|
| சுக்கு | – | 1 வீசை (1.4 கி.கிராம்) |
| மிளகு | – | 1 வீசை (1.4 கி.கிராம்) |
| கௌரி | – | 1 வீசை (1.4 கி.கிராம்) |

இவற்றைத் தேவையான அளவு அவுரிச் சாற்றில் 1 சாமம் அரைத்துப் பின் பாகற் சாற்றில் 1 சாமம் அரைத்து உளுந்தளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். 1 மணித்துளி ஒரு நாளைக்கு 2 வேளை வீதம் வழங்க சுரம் தீரும்.

## தீரா சுரம் தீர

| | | |
|---|---|---|
| தும்பைப்பூ | – | 1 சிறங்கை |
| மிளகு | – | 5 எண்ணிக்கை |
| பூண்டு | – | 2 பல் |

இவற்றை அரைத்து இருவேளை உண்ணவும்.

## தீரா சுரம் தீர (வேறு)

குளிர் சுரம் தீரக் காலையில் 1 முதல் 2 தேக்கரண்டி இஞ்சிச் சாறும், சுரம் வரும்பொழுது செம்பருத்திப்பூ, ஒரு எலுமிச்சம்பழமும் சேர்த்துத் தரவும். இவ்வாறு 2, 3 முறை தர குளிர் சுரம் தீரும்.

## முறை சுரம் தீர

| | | |
|---|---|---|
| குப்பைமேனி | )( | ஒரு பிடி |
| மிளகு | )( | 5 எண்ணிக்கை |

இரண்டையும் அரைத்துக் கழற்சிக்காயளவு கற்கத்தைத் தரவும். இவ்வாறு 3 நாட்கள் உண்ண, முறை சுரம் தீரும். இச்சாபத்தியம். புளி நீக்கவும்.

## பேதிக்குச் சூரணம்

| | | |
|---|---|---|
| திராட்சைப்பழம் | )( | |
| கற்கண்டு | )( | சம அளவு |
| சூரத்து நிலாவாரைச் சூரணம் | )( | |

இவற்றைப் பொடி செய்து கொண்டு (வெருகடி) 2 முதல் 3 கிராம் அளவு உண்ண பேதியாகும். ஒரு முறை, இருமுறை தரலாம்.

## வயிறு பேதி ஆக

நேர்வாளத்தைச் சுத்தி பண்ணிப் பாதிப் பருப்பையும், பெருஞ்சீரகத்தையும் பொடி பண்ணிப் பாக்களவு வெல்லமும் கலந்து 10 மி.லி. விளக்கெண்ணெயில் கொதிக்க வைத்துத் தரவும். நன்றாக பேதியாகும்.

## பைத்தியம் தீர

| | |
|---|---|
| அருகன் கட்டை | – 1 வீசை (1.4 கி.கிராம்) |
| பூவரசம்பட்டை | – 1 வீசை (1.4 கி.கிராம்) |
| வன்னியிலை | – 1 வீசை (1.4 கி.கிராம்) |

இவற்றைத் தனித்தனியாகப் பாண்டத்திலிட்டுத் தண்ணீர் விட்டுக் காய்ச்சி ஒரு நாளைக்கு ஒரு வகை மருந்து நீரில் தலைக்கு வார்க்கவும்.

வாழைப்பழத்தைப் பிழிந்து எருக்கம் பாலை 10 துளி விட்டு மூடித் தர வாந்தியாகும். 3 நாட்கள் தரவும்.

**உணவு:**

பச்சரிசிக் கஞ்சி

## வாந்தி நிற்க

ஒரு எலுமிச்சம்பழத்தை அறுத்துச் சிறிது சாறு பிழியவும். 4.2 கிராம் ஏலக்காயைப் பொடி செய்து முன் உள்ள பழத்துண்டுடன் சொருகித் தீயில் வைக்கவும். தோல் கருகியவுடன் எடுத்து, முன் எடுத்த சாற்றில் அரைத்து மூன்று மாத்திரை செய்து, ஒவ்வொன்றாய் தரவும். வாந்தி உடன் நிற்கும்.

## வாந்தி நிற்க (வேறு)

உள்ளங்கை அகல வெள்ளைத் துணியை சுண்ணாம்பு தடவி புதுச் சட்டியிலிட்டு எரித்து, சாம்பலாக்கவும். 2 ஆழாக்கு (336 மி.லி) நீர்விட்டு மேற்படி சாம்பலுடன் எரித்து 1/8 பங்காகக் குறுக்கி, வடிகட்டிக் குடிக்கவும்.

## கிருமிகள் நீங்க

புரசம் வித்து

இரவில் சாணிப்பாலில் சொருகி வைத்து காலையில் எடுத்து மேல்தோலை நீக்கவும். பின் பசும்பாலில் அரைத்துண்ணப் பேதியாகும். பூச்சிகள் கூண்டோடு மலத்தில் விழும்.

## எல்லாவகையான வெப்பமும் தீர

கல்நார்
கல்மதம்
சிருங்கி(மான்கொம்பு)
பவழம்
சோழி( பலகறை)
நண்டுக்கல்

இவைகளின் பற்பத்தை வகைக்கு 100 மி.கி. கலந்து நெய்யில் இருவேளை உண்ணவும்.

## வெட்டை தீர

| | | |
|---|---|---|
| வெங்காயச்சாறு | – | 1 சேர் (280 கிராம்) |
| விளக்கெண்ணெய் | – | 1 சேர் (280 கிராம்) |

| | | |
|---|---|---|
| பனைவெல்லம் | – | 1 சேர்(280 கிராம்) |
| நொச்சிச்சாறு | – | ½ சேர் (140 கிராம்) |
| குறிஞ்சிச்சாறு | – | ¼ சேர் (70 கிராம்) |

ஒன்றாகக் கலந்து காய்ச்சிப் பதத்தில் வடித்து 2 தேக்கரண்டி மூன்று நாள் ஆறுவேளை குடிக்கவும். மூன்றுநாள், ஐந்து நாள் உப்பு, புளி வறுத்துச் சேர்க்கலாம். ஏழுநாள் இச்சா பத்தியம்.

## எட்டு விதமான குன்மம் தீர

| | | |
|---|---|---|
| புளியம் பொறுக்கு சுட்ட சாம்பல் | – | 1 பலம் (35 கிராம்) |
| சவுட்டுமண் | – | 1 பலம் (35 கிராம்) |

இவற்றை இஞ்சிச் சாற்றிலரைத்து உருண்டை செய்து, சுழற்சி அளவு எடுத்துக் கொண்டு வெந்நீரில் குடிக்க எட்டுவகைக் குன்மம் தீரும்.

## தீராத குன்மம் தீர

| | | |
|---|---|---|
| எருக்கம்பூ | – | 5 |
| எருக்க இலை | – | 5 |
| ஆரைப்பூ | – | 5 |

தனித்தனியே அரைக்கவும். தேங்காயைத் துருவிக் கொள்ளவும். பின் பரப்பி, கற்கத்தை நடுவில் வைக்கவும். பிட்டவியலாக அவித்து எடுக்கவும். பூவைப் பால் பிழிந்து, மருந்தில் குழைத்து ஒருவேளை தரவும். 3 நாள் உண்ணவும். உப்பு, புளி கூடாது. 4 ம் நாள் குளிக்கவும். தீராத வலி தீரும். இலிங்க செந்தூரம் அரிசி எடை சேர்த்துக் கொடுக்கவும்.

## வயிறு உப்பிசத்திற்கு மருந்து

| | | |
|---|---|---|
| ஓமம் | )( | |
| நாய்க்கடுகு | )( | சம அளவு |
| குரோசானி ஓமம் | )( | |

மூன்றையும் தனித்தனியாக வறுத்துப் பொடி செய்து வெல்லம் சேர்த்து, லேகியம் செய்து 3 முதல் 5 கிராம் உண்ணவும். (இரண்டுவேளை) இச்சா பத்தியம்.

## சூதகவாயு, வயிற்றுவலி, குன்மவலிக்கு மருந்து

கொடிவேலி இலையை அரைத்துக் குகை செய்து உலர்த்திக் கொள்ளவும். கல்லுப்பை நிலாவாரைச் சாறு விட்டரைத்து வில்லை தட்டவும். பின் காயவைத்துக் குகைக்குள் வைத்துத் துணிக் கவசம் செய்து 20 வரட்டியில் புடம் போட்டெடுக்கவும். அரிசி எடை தரவும். இச்சா பத்தியம்.

## சூதகவாயு, வயிற்றுவலி, குன்மவலிக்கு மருந்து (வேறு)

| | | |
|---|---|---|
| வெள்ளெருக்கு இலைச்சாறு | – | 1 படி (1.3 லிட்) |
| எலுமிச்சம்பழச்சாறு | – | 1 படி (1.3 லிட்) |
| கந்தகவட்டுப்பு | – | ¼ படி(320 மி.லி) |
| மஞ்சள் | – | 1 |

இச்சரக்குகளை இடித்துச் சலித்து, முன் சொன்ன இரு சாறுகளில் போட்டு மூன்று நாட்கள் சூரியபுடம் வைத்து, 4 ஆம் நாள் எடுக்கவும். சிறு கரண்டியளவு உட்கொள்ள, பசியின்மை, புளித்தேப்பம்,

வயிறு பொருமல், இரைச்சல், வாய் நீர் ஊறுதல், கிராணி நெஞ்செரிவு இவை தீரும்.

## இரத்தக்கடுப்பு, இரைச்சல் தீர (வேறு)

வெதுப்படக்கி இலையைத் துவைத்து (1.3 லிட்) படி சாறு எடுக்கவும். பின் மூன்று செங்கல் துண்டை தீயிலிட்டுக் காய்ச்சி சாற்றில் போடவும். சாறு முறிந்த பின்பு, செங்கல்லை நீக்கி 20 மி.லி. சாற்றைக் குடிக்கவும். இரத்தக் கடுப்பு, வலி, இரைச்சல், பொருமல் என்பன தீரும்.

## நீரிழிவுக்கு மருந்து

அத்தி, ஆல், நெற்பொரி, ஆவாரை விதைப் பொடி செய்து 1 முதல் 2 கிராம் பழந் தேனில் கலந்து உண்ணவும். நீரிழிவு, நீர் வேட்கை தீரும்.

## வெண் குட்டம் தீர (வேறு)

| | | |
|---|---|---|
| அன்னபேதி | – | 35 கிராம் |
| சிறுசெருப்படி | )( | 1 படி (1.3 லிட்டர்) |
| பொற்றலைக்கையான் | )( | 1 படி (1.3 லிட்டர்) |
| பாகல் இலை | )( | 1 படி (1.3 லிட்டர்) |
| தாழை வேர்ச் சாறு | )( | 1 படி (1.3 லிட்டர்) |

இவற்றைப் பச்சைத் தண்ணீரில் ஒவ்வொரு நாளும் அரைக்க வேண்டும். பின் கல்வத்தில் வில்லை தட்டிக் காயவிட்டு எருவில் புடமிட செந்தூரமாகும். 4, 5 நாட்கள் அமுரியில் உண்ணவும். வாயு உணவு நீக்கவும்.

## ஆறாத இரணம் தீர

| | | |
|---|---|---|
| தேங்காய் எண்ணெய் | – | 1 சேர் (280 கிராம்) |
| சூடன் | – | 4 வராகன் (14 கிராம்) |

எண்ணெயைக் காயவைத்துச் சூடத்தைப் போட்டுக் கலந்து பகுகுவத்தில் இறக்கவும். இதைப்பூசிவர, மேக இரணம், புண் என்பன தீரும்.

## நீடித்த நீரடைப்புத் தீர

| | | |
|---|---|---|
| சம்பா புழுங்கலரிசி | – | ¼ படி (325 மி.லி) |
| வெங்காயம் | – | ¼ படி (325 மி.லி) |
| வெந்தயம் | – | ¼ படி (325 மி.லி) |
| தண்ணீர் | – | 1 மரக்கால் (5.3 லிட்) |

தண்ணீரில் முதலில் வெந்தயத்தைப் போட்டு வேகவிடவும். வெங்காயத்தைச் சேர்க்கவும். பின் அரிசியை மையாக வேகவிடவும். ¼ பங்கு அளவுக்கு எடுக்கவும். சமஅளவு தேங்காயின் பாலைக் கலந்து வேண்டிய அளவு உண்ணவும். இச்சா பத்தியம். மூன்று நாள் உண்ணவும்.

## நீரிழ்'வு தீர

| | | |
|---|---|---|
| தென்னம்பாளை | )( | |
| ஆவாரைப் பஞ்சாங்கம் | )( | |
| சாதிலிங்கம் | )( | |
| கருடப்பச்சை | )( | சம அளவு |
| காந்தம் | )( | |
| கல்நார் | )( | |
| கல்மதம் | )( | |
| சகஸ்திரவேதி | )( | |

இவற்றைச் சம எடையாக எடுத்து எருமைமோரில் வேகவைக்கவும்.

பின் அரைத்துப் புன்னைக் காயளவுக்கு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி ஒரு உருண்டை வீதம் எருமைமோரில் உட்கொள்ளவும். நீரிழிவு, நீர்வேட்கை, உடல் எரிச்சல், அத்திசுரம் என்பன தீரும்.

## கிராணி தீர

| | | |
|---|---|---|
| ஓமம் | – | 2 பலம் (70 கிராம்) |
| அபின் | – | 1 வராகன் (4.2 கிராம்) |

அபினைக் கதிரில் கோத்து விளக்கில் வெதுப்பி மெழுகு பதத்தில் எடுத்துப் பொடி செய்து கொள்ளவும். ஓமத்தைப் பொடி செய்து இரண்டையும் கலந்து. வெந்நீரில் உட்கொள்ளவும்.

## செவிடு தீர

நட்டுவாக்காலியை அடித்துக் கொன்று அதனை ½ சேர் (140 கிராம்) நல்லெண்ணெயில் போட்டு 10 நாட்கள் ஊறப்போடவும். பின் வடிகட்டி காதில் விட செவிடு நீங்கும்.

## நீரிழிவுக்கு

| | | |
|---|---|---|
| அருகன்வேர் | – | 5 பலம்(175 கிராம்) |
| கோரைக்கிழங்கு | – | 5 பலம்(175 கிராம்) |
| ஏலக்காய் | – | 1 பலம் (35 கிராம்) |
| அதிமதுரம் | – | 1 பலம் (35 கிராம்) |
| கடலழிஞ்சிப்பட்டை | – | 5 பலம்(175 கிராம்) |
| மலாக்கா சந்தனக்கட்டை | – | 5 பலம்(175 கிராம்) |
| வெட்டிவேர் | – | 5 பலம்(175 கிராம்) |

| | | |
|---|---|---|
| விலாமிச்சவேர் | – | 5 பலம்(175 கிராம்) |
| தண்ணீர் | – | 4 படி (5.2 லிட்) |

இவற்றை அடுப்பேற்றி 3 படியாக (3.9 லிட்) வற்றியவுடன் எடுத்துக் குடிக்கவும்.

ஆவாரம் விதை ¼ படி (325 மி.லி) கியாழத்தில், ஊறப் போட்டு அரைத்துப் புன்னைக் காயளவுக்குக் கொடுத்து, மேலே கியாழம் 30 முதல் 60 மி.லி. குடிக்கவும். இச்சா பத்தியம்.

## தெற்கத்திக்கணைக்கு எண்ணெய்

சன்னிமாந்தம் என்று இதுபெயர் பெறும்.

| | |
|---|---|
| பூரம் | ¼ பலம் (8.75 மி.கி.) |

வேப்பெண்ணெய் விட்டரைத்து வசம்பில் தடவி, கதிரில் கோத்துக் கொண்டு எரிக்கவும். வேப்பெண்ணெயை ஏழுதரம் திருப்பி திருப்பித் விடவேண்டும். சுடர் தைலமாக எரித்துக் கொண்டு உடல்வன்மைக்குத் தக்கபடி 3 முதல் 5 துளி தரவேண்டும்.

## மஞ்சள்காமாலை தீர

| | | |
|---|---|---|
| கொடிவேலி வேர் | – | 40 பலம் (1.4 கி.கி) |
| நல்லெண்ணெய் | – | 45 பலம்( 1.575 கி.கி) |

வேரை நறுக்கி எண்ணெயில் போட்டு மஞ்சள் பதம் வரும்வரை சுடவைத்து எடுத்துக்கொள்ளவும். தலைக்குத் தேய்த்து முழுகவும். உப்பில்லாப் பத்தியம் 3 நாள் இருக்கவும்.

## நீர்ச்சுருக்கு தீர

| | | |
|---|---|---|
| பொரித்த வெங்காரம் | – | 1 பலம்(35 கிராம்) |
| வெடியுப்பு | – | ½ பலம் (17.5 கிராம்) |

இவற்றை நீர்விட்டு அரைத்து 100 மி.லி. எலுமிச்சம் சாறுவிட்டுக் குழப்பித் தரவும். மூன்று நாட்கள் தொடர்ந்து உண்ணவும். இச்சா பத்தியம்.

## சூதகக் கட்டு, பெரும்பாடு தீர

| | | |
|---|---|---|
| சூடம் | )( | |
| சாம்பிராணி | )( | சம அளவு |
| லிங்கம் | )( | |

சூடம், சாம்பிராணியை அரைத்துத் துணியில் தடவவும். லிங்கத்தைக் கட்டிக் கொளுத்தி எடுக்கவும். லிங்கத்தை எடுத்துக் கோழிமுட்டைத் தைலத்தில் சுருக்குத் தரவும். பின் லிங்கத்தைப் பொடி செய்து பனை வெல்லத்தில் **30** முதல் **60** மி.கி. **7** நாட்கள் தரவும். உப்பில்லாப் பத்தியம்.

| | | |
|---|---|---|
| கொப்பரைத் தேங்காய் | – | 1 |
| சிவப்பு காவிக்கல் | – | 5 |

இரண்டையும் அரைத்து மெழுகான பின், புன்னைக் காயளவு ஒருவேளை வீதம் 3 நாட்கள் தரவும். இச்சா பத்தியம்.

| | | |
|---|---|---|
| கட்டின இலிங்கம் | – | 1 பலம்(35 கிராம்) |
| திரிகடுகு | – | 3/4 பலம் (26. 25 கிராம்) |

இவற்றைச் சேர்த்துப் பொடி செய்து 30 முதல் 90 மி.கி. செந்தூரம் தரலாம்.

| | | |
|---|---|---|
| சன்னலவங்கப்பட்டை | )( | சமஅளவு |
| மாசிக்காய் | )( | |

இவற்றைச் சூரணம் பண்ணி மூவிரல் அளவு 3 நாட்கள் காலை மாலை உண்ணவும். உப்பு, புளி தள்ளவும்.

## சன்னிக்குச் சாறு

| | | |
|---|---|---|
| மாவிலங்கப்பட்டை | )( | |
| எருக்கம்பட்டை | )( | |
| இஞ்சி | )( | 20 மி.லி சாறு எடுத்துத் தரவும். |
| கொடிவேலிப்பட்டை | )( | |

## நீர்க்கட்டு, நீர்ச்சுருக்கு தீர

| | | |
|---|---|---|
| வெங்காரம் | – | 2 பலம் (70 கிராம்) |
| சிலாசத்து | – | 2 பலம் (70 கிராம்) |

இவற்றைப் பழச்சாற்றிலரைத்து வில்லை தட்டிக் காயவைத்துப் புடமிடவும். 4 முறை செய்யவும். பற்பமாகும். 125 முதல் 325 மி.கி. வெண்ணெயில் தரவும்.

## மேகம் தீர (வேறு)

| | | |
|---|---|---|
| தேங்காய் எண்ணெய் | – | 10 பலம் (350 கிராம்) |
| வாளம் | – | ¼ பலம்(8.75 கிராம்) |
| இந்துப்பு | – | ¼ பலம்(8.75 கிராம்) |
| கடுகுரோகிணி | – | ¼ பலம்(8.75 கிராம்) |

இவற்றை வெந்நீர் விட்டரைத்து எண்ணெயில் குழப்பி மெழுகு பதமாய்க் காய்ச்சவும். ஒரு சொட்டுத் தரப் பேதியாகும். மேகம் தீரும்.

## நீர்க்கடுப்பு தீர

| | | |
|---|---|---|
| சங்கிலை | – | 13 |

இதனை வாயில் போட்டு மென்று சாறு விழுங்கவும். நீர்க்கட்டு உடனே தீரும்.

## பீனிசம் தீரத் திரி

| | | |
|---|---|---|
| வேப்பங்கொட்டை | – | ½ பலம் (17.5 கிராம்) |
| நேர்வாளக்கொட்டை | – | ½ பலம் (17.5 கிராம்) |

இவற்றை அரைத்துப் புதுத் துணியில் தடவி திரியாகத் திரித்துப் பற்றவைத்துப் புகை இழுக்கத் தீரும்.

## பீனிசம் தீரத் தைலம்

| | | |
|---|---|---|
| ஆகாயத்தாமரைச் சாறு | – | 1 படி (1.3 லிட்) |
| எண்ணெய் | – | 1 படி (1.3 லிட்) |
| மிளகு | – | 1 பலம் (35 கிராம்) |

இவற்றைச் சேர்த்து அடுப்பிலேற்றி எரிக்க, மிளகு மிதக்கும். மெழுகுபதத்தில் எடுத்து இறக்கிக் குளிக்கவும். சீயக்காய் தேய்த்துக் குளிக்கவும்.

## பல்வலிக்கு

கொடிவேலி வேர்ப்பட்டை

இதனை எருக்கம்பால் விட்டு அரைக்கவும். பின் ½ முதல் 1 கிராம் வாய்க்குள் அடக்க இரு நாழிகையில் வலி நிற்கும்.

## சூதகவலி தீர

சோற்றுக் கற்றாழை சோற்றைச் சுத்தி செய்து

| | | |
|---|---|---|
| சீரகம் | -- | ஒரு சிரங்கை |
| சீனிச்சர்க்கரை | )( | |
| பேயன்வாழை | )( | |

இவற்றுடன் மிளகை முள்ளிக்காயளவு எடுத்துச் சாராயம், பிராந்தியில் விட்டரைத்து, கற்கம் செய்து கலந்து கொள்ளவும். மூன்று நாளைக்கு ஆறுவேளை உட்கொள்ளவும். அளவு முள்ளிக்காயளவு. வெப்பம் அதிகப்படும். பொறுத்துக் கொள்ளவும். 4 ம் நாள் சீனி சேர்த்து 6 நாட்கள் 12 வேளை எலுமிச்சங்காயளவு உண்ணவும். மிளகைக் குறைத்துச் சேர்க்கவும். பத்தியமில்லை. மகப்பேறு ஏற்படும்.

## பல் ஈறு இரத்தம் வீக்கத்திற்கு

| | | |
|---|---|---|
| தேங்காய் எண்ணெய் | – | 1படி (1.3 லிட்) |
| பொடுதலைச்சாறு | – | 1 படி (1.3 லிட்) |
| நெல்லிவற்றல் | )( | |
| தான்றிக்காய்த்தோல் | )( | வகைக்கு 3 பலம்(105 கிராம்) |
| தேவதாரம் | )( | |
| வெள்ளைவேலம்பட்டை | )( | |

இவற்றை அரைத்துக் காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு சிறிது எண்ணெய் வாயில் விட்டுக் கொப்பளித்து உமிழவும். நாள் ஒன்றுக்குப் பத்துமுறை செய்யவும்.

## பாண்டு காமாலை தீர

| | | |
|---|---|---|
| பசுவின் கோமயம் | – | 1 படி (1.3 லிட்) |

| | | |
|---|---|---|
| வெள்ளாட்டுக் கோமயம் | – | 1 படி (1.3 லிட்) |
| கையான்சாறு | – | 1 படி (1.3 லிட்) |
| பூண்டு | – | 2 பலம் (70 கிராம்) |
| பனைவெல்லம் | – | 5 பலம்(175 கிராம்) |

இவற்றின் சாறுகளைக் கூட்டி வடிகட்டவும். மைபோலச் சாறு கூடச் சேர்த்துப் பாகாய்க் காய்ச்சவும்.

| | | |
|---|---|---|
| சுக்கு | )( | |
| திப்பிலி | )( | |
| மிளகு | )( | |
| சிற்றரத்தை | )( | |
| சீரகம் | )( | |
| வெங்காரம் | )( | |
| கருஞ்சீரகம் | )( | |
| கடுகுரோகிணித்தோல் | )( | |
| தேவதாரம் | )( | |
| மண்டூரம் | – | 1 பலம் (35 கிராம்) |

இவற்றை இடித்துச் சலித்துக் கொண்டு முன் சொன்ன பாகில் சேர்த்துக் கிளறவும். பசுநெய் ¼ படி (325 மி.லி.) விட்டு எடுத்து லேகிய பதத்தில் எடுக்கவும். கழஞ்சு அளவுக்கு உண்ணவும். சோகை, பாண்டு, காமாலை, நீர்க்கோவை தீரும்.

பத்தியம்: பசுநெய், மோர், துவரம்பருப்பு, முருங்கைப்பிஞ்சு, சுண்டைவற்றல், தூதுவிளங்காய் வற்றல் என்பன உண்ணலாம்.

மண்டூரத்தை இடித்து, எலுமிச்சங்காய் சாற்றில் ஊறவைத்து, காயவைத்து, பொடி செய்து, சலித்துச் சேர்க்கலாம்.

## நீரிழிவு தீர (வேறு)

| | | |
|---|---|---|
| ஆவாரை விதை | – | 10 பங்கு |
| இரசகற்பூரம் | – | 5 பங்கு |

| | | |
|---|---|---|
| காசுக்கட்டி | – | 5 பங்கு |

எடுத்துக்கொண்டு ஆவாரம் விதையை வறுத்து இடித்துச் சலித்துக் கொள்ளவும். பின் கல்வத்தில் மூன்றையும் கொட்டி, நல்லெண்ணெயுடன் சேர்த்து அரைத்து மெழுகுபதமாய் எடுக்கவும் பருத்திவிதை அளவு உண்ணவும். 14 நாட்கள் காலை, மாலை உண்ணவும். நல்லெண்ணெயில் உருட்டி உண்ணவும். கரப்பான் உணவைத் தள்ளவும். நீரிழிவு, கை கால் பிடிப்பு, மேகரணம் தீரும். இச்சா பத்தியம்.

## இருமல் தீரச் சூரணம்

| | | |
|---|---|---|
| கடுக்காய் | – | 1 பலம் (35 கிராம்) |
| கருஞ்சீரகம் | – | 1 பலம் (35 கிராம்) |
| இந்துப்பு | – | 1 பலம் (35 கிராம்) |
| சுக்கு | – | 1 பலம் (35 கிராம்) |
| மிளகு | – | 1 பலம் (35 கிராம்) |
| தேற்றான் கொட்டை | – | 50 |

இவற்றைப் பொடி செய்து, எலுமிச்சம்பழச் சாற்றால் பிசைந்து 1 முதல் 2 கிராம் அளவு உண்ணவும். எட்டுவகையான இருமல், உப்பிசம், சுவாசகாசம் தீரும்.

## தாது பெருக

| | | |
|---|---|---|
| மணத்தக்காளிச்சாறு | – | 1 படி (1.3 லிட்) |
| பசுநெய் | – | 1 படி (1.3 லிட்) |
| பசுப்பால் | – | 1 படி (1.3 லிட்) |
| ஆனைத்திப்பிலி | )( | |
| கற்கடகசிங்கி | )( | |
| அதிமதுரம் | )( | |
| கோட்டம் | )( | |
| செவ்வியம் | )( | |
| திப்பிலி | )( | |

| | | |
|---|---|---|
| ஏலம் | )( | |
| சுக்கு | )( | |
| மிளகு | )( | |
| கடுக்காய் | )( | |
| தான்றிக்காய் | )( | |
| நெல்லிக்காய் | )( | |
| இருசீரகம்(கருஞ்சீரகம், சீரகம்) | )( | |
| வட்டத்திருப்பி | )( | |
| நன்னாரிவேர் | )( | |
| ஓமம் | )( | |
| வாய்விளங்கம் | )( | |
| நெய் | – | 1 நாழி |

இவற்றை இடித்துச் சூரணம் பண்ணவும். பால் விட்டு அரைத்து, நெய் கலந்து பதத்தில் காய்ச்சி வடித்து 1 தேக்கரண்டி உட்கொள்ள காசசுவாசம், இருமல், பைத்தியம், மேகவெட்டை தீரும், தாது பெருகும். இச்சா பத்தியம்.

## தாது பெருக (வேறு)

| | | |
|---|---|---|
| முருங்கைப்பூ | )( | |
| தூதுவளைப்பூ | )( | |
| தண்ணீர்விட்டான் கிழங்கு | )( | வகைக்கு 2 பலம் (70 கிராம்) |
| நிலப்பனைகிழங்கு | )( | |
| அமுக்ராக்கிழங்கு | )( | |
| பூனைக்காலிவிதை | )( | |
| அதிமதுரம் | )( | |
| கொத்துமல்லி | )( | |

இவற்றை இடித்துப் பொடி செய்து, சலித்துக் கொள்ளவும். பசும்பால் 4 படியில் (5.2 லிட்) போட்டுக் காய்ச்சி (1.3 லிட்) 1 படியாக்கவும். பத்துப்பலம் சர்க்கரை, ஒரு படி நெய், ½ படி(650 மி.லி) தேன் விட்டு

லேகியம் செய்து பாக்களவு உண்ண தாது இழப்புத் தீரும். தாது பெருகும். நல்லது, கைகண்ட முறையாகும்.

## தாதுபெருக (வேறு)

| | | |
|---|---|---|
| வெள்ளரளி வேர் | – | 2 பிடி |
| பசுப்பால் | – | 4 பிடி (5.2 லிட்) |
| தண்ணீர் | – | 4 படி (5.2 லிட்) |

வேரைப் பாலில் அரைத்துக் கலந்து கொள்ளவும். காய்ச்சி எடுத்து ஆறவிடவும். உறைந்து தயிராகும். வெண்ணெய் எடுத்துக் கழற்சி அளவு உண்ண, தாது பெருகும்.

## உதிரவாயு, பெரும்பாடு தீர

பசும்பாலில் நெய் சேர்த்துக் காய்ச்சித் தரவும். இச்சா பத்தியம்.

மண்டைசிங்கி என்கின்ற சீயக்காயை விரை நீக்கி அரைத்து முள்ளிக்காயளவு மூன்று வேளை உண்ணவும்.

## விரைவாதம் தீர

விரையில் வலிகண்டால் உடன் கோழிமுட்டையின் வெண் கருவில், கழற்சி விரை இரண்டைப் பொடித்துப் போடவும். கழற்சி இலைச் சாறு படி ஊற்றவும். பின் அடுப்பேற்றிக் காய்ச்சிக் கிளறிக் கொடுக்கவும். இறக்கிய பின் 5 முதல் 10 கிராம் மூன்றுவேளை உண்ணவும். வலதுபுறம் வலித்தால் இடதுபுறப் பெருவிரலிலும். இடதுபுறம் வலித்தால் வலதுபுறப் பெருவிரலிலும் சிறுகயிற்றால் வரிந்து கட்' உடன் வலி தீரும்.

## தலைவலி தீர

| | | |
|---|---|---|
| குறுந்தொட்டி வேர் | – | 4 பலம் (140 கிராம்) |
| வில்வவேர் | – | 4 பலம் (140 கிராம்) |
| சீந்தில் கொடி | – | 4 பலம் (140 கிராம்) |
| வேங்கைச்சிறா | – | 2 படி (2.6 லிட்டர்) |
| எண்ணெய் | – | 2 படி (2.6 லிட்டர்) |
| கடுக்காய் | )( | |
| நெல்லிக்காய் | )( | |
| தான்றிக்காய் | )( | வகைக்கு ஒரு கழஞ்சு |
| அதிமதுரம் | )( | |
| சுக்கு | )( | |

தண்ணீரில் இம் மூலிகைகளைப் போட்டு 4 படியாக (5.2 லிட்) எரித்துக் குறுக்கிக் கியாழம் செய்யவும். பின்னர் கடைச் சரக்குகளைப் பொடி செய்து கியாழத்திலரைத்து, கற்கமாக்கவும். கற்கத்தை எண்ணெயில் கலந்து, தண்ணீர் கருகின பின்பு, பால் 1 படி (1.3 லிட்) ஊற்றிச் சுருக்குப் பதத்தில் இறக்கிக் கொள்ளவும். வடி கலத்தில் கற்பூரம் பணவெடை, அஞ்சனக்கல் பணவெடை பொடித்துப் போடவும். இதனைத் தேய்த்துக் குளித்து வர தலைவலி தீரும்.

## துவரெண்ணெய்

| | | |
|---|---|---|
| வேம்பாடம்பட்டை | – | ¼ பலம் (8.75 கிராம்) |
| சந்தனக் கட்டை | – | ¼ பலம் (8.75 கிராம்) |
| அரசம்பட்டை | – | ½ பலம் (17.5 கிராம்) |
| கடுக்காய் (கொட்டை இல்லாமல்) | – | ¼ பலம் (8.75 கிராம்) |
| கருஞ்சீரகம் | – | ½ பலம்(17.5 கிராம்) |
| கந்தகம் | – | ” |
| காசுக்கட்டி | – | ¼ பலம் (8.75 கிராம்) |
| பூரம் | – | ” |
| குங்கிலியம் | – | ” |

எண்ணெய் – 1 படி (1.3 லிட்)

இவ்வளவு சரக்குகளையும் பொடி செய்து, எண்ணெயில் போட்டுக் காய்ச்சிப் பதத்தில் இறக்கவும். வெட்டுக் காயம், மேக இரணங்களுக்குத் தடவலாம். இரணங்கள் தீரும்.

## இரணக் களிம்பு

| | | |
|---|---|---|
| வேம்பாடம்பட்டை | )( | |
| களிப்பாக்கு | )( | |
| கடுக்காய்த்தோல் | )( | சம அளவு |
| காசுக்கட்டி | )( | |
| அரசம்பட்டை | )( | |
| வெள்ளைக் குங்கிலியம் | )( | |
| பூரம் | )( | |

இவற்றைக் குழி அம்மியிலிட்டு எலுமிச்சங் காயளவு பசுவெண்ணெய் போட்டரைத்து அதன்பின் ஊத்தின எண்ணெய் துட்டு எடை விடவும். அரைத்துக் களிம்பாக்கவும். இதை வெட்டுக்காயம், உதிரமான காயம், மேக இரணம், கிரந்திப்புண், சிரங்குக்குப் போடத் தீரும். ஆறு மாதத்திற்கு அப்பால் இராது.

## இரணக் களிம்பு (வேறு)

| | | |
|---|---|---|
| கந்தகம் | )( | |
| இரசம் | )( | |
| இலிங்கம் | )( | சம அளவு |
| குங்கிலியம் | )( | |
| துருசு | )( | |

இவற்றை ஒன்று சேர்த்துக் குழி அம்மியில் 10 வராகன் (42 கிராம்)

பசு வெண்ணெய் விட்டு அரைத்துத் தூய்மையான நீர்விட்டு ஒரு சாமம் அரைத்துப் போட இரணம் முழுமையும் தீரும்.

## இருமல் தீரச் சூரணம் (வேறு)

| | | |
|---|---|---|
| சுக்கு | )( | |
| கடுக்காய் | )( | |
| அரத்தை | )( | |
| வாலுளுவை அரிசி | )( | |
| திப்பிலி | )( | வகைக்கு ¼ பலம் (8.75 கிராம்) |
| மிளகு | )( | |
| சீரகம் | )( | |
| எள் | )( | |
| பனங்கற்கண்டு | – | 4 பலம் ( 140 கிராம்) |

இக்கடைச் சரக்குகளை இளவறுப்பாக வறுத்துப் பொடி செய்து, சலித்து, 1 முதல் 2 கிராம் கற்கண்டு கலந்துண்ணவும். இருமல் தீரும். இச்சா பத்தியம்.

## இரணக் களிம்பு (வேறு)

| | | |
|---|---|---|
| வெள்ளைக் குங்கிலியம் | )( | |
| மயில் துத்தம் | )( | |
| பால் துத்தம் | )( | வகைக்கு 2 பலம் ( 70 கிராம்) |
| காசுக்கட்டி | )( | |
| இரசம் | )( | |
| பூரம் | )( | |

இவற்றை வெண்ணெய், தண்ணீராலரைத்துக் கொள்ளவும். மறுபடியும் வெண்ணெய் விட்டரைத்துக் காசினால் உரைத்து செம்பினால் வழித்துச் செப்பு டப்பியில் வைத்துக் கொள்ளவும். மேலுக்குப்பூசி வரப் புண்,

இரணம், கிரந்தி இரணம், ஆறாத இரணம் என்பன அறுபது நாழிகைக்குள் ஆறும்.

மேலும்,

வாழைத்தண்டு சுட்டசாம்பல்
மஞ்சள்
சுண்ணாம்பு
விளக்கெண்ணெயில்

குழப்பிச் சீலையில் தடவி இட இரணம் ஆறும்.

## உதிரச் சிக்கல் தீர

| | | |
|---|---|---|
| வெள்ளாட்டுப் பித்து | )( | |
| சேவல் பித்து | )( | |
| மிளகு | )( | வகைக்கு 2 பலம் (70 கிராம்) |
| இந்துப்பு | )( | |

முதல் மூன்றையும் சேர்த்துப் பாத்திரத்தில் போட்டு, வாயை மூடவும். காய்ந்த பிறகு தோலை நீக்கிப் பீங்கான் தட்டில் போடவும். இந்துப்பைச் சேர்த்து, கொடிக் கள்ளிப்பாலை நிறைய விடவும். நாள் முழுவதும் வைக்கவும். காய்ந்தவுடன் எடுத்துப் பிரண்டைச் சாறு விட்டரைத்துச் சுண்டைக் காயளவு உருண்டை செய்யவும். நிழலில் உலர்த்தவும். ஒரு உருண்டை வீட்டுத்தூரம் நாள் துவங்கியதில் தரவும். மூன்று நாட்கள். உதிரச் சிக்கல் தீர்ந்து பிள்ளை உண்டாகும்.

## நெல்லிக்காய தைலம்

| | | |
|---|---|---|
| நெல்லிக்காய் சாறு | )( | |
| பொன்னாங்காணிச்சாறு | )( | வகைக்கு 2 படி (2.6 லிட்) |
| சிறுகீரைச்சாறு | )( | |

கற்றாழைச்சாறு )(
பசும்பால் )(
இளநீர் )(
அதிமதுரம் )(
கோட்டம் )(
ஏலம் )(
குரோசானிஓமம் )(
வங்காளப்பச்சை )(
பூலாங்கிழங்கு )(
கஸ்தூரிமஞ்சள் )(
சடாமாஞ்சில் )(
சீரகம் )( வகைக்கு 5 வராகனெடை (21கிராம்)
சாதிக்காய் )(
சாதிப்பத்திரி )(
இலவங்கப்பத்திரி )(
இலவங்கப்பட்டை )(
சுக்கு )(
அரிசித்திப்பிலி )(
நெல்லிமுள்ளி )(
மிளகு )(
கடுக்காய் )(
தான்றிக்காய் )(
கருஞ்சீரகம் )(
வால்மிளகு )(
பூஞ்சாந்துப்பட்டை )(

இந்தக் கடைச்சரக்குகளைப் பாலில் அரைத்து வடித்து நல்லெண்ணெயில் சாறுகளுடன் கலந்து அடுப்பேற்றித் தைலம் காய்ச்சிப் பதத்தில் இறக்கிப் பயன்படுத்தவும். குளிக்க, கண் குளிர்ச்சி, கை கால் எரிச்சல், உடல் எரிச்சல் தீரும்.

# வெட்டை தீர

| | | |
|---|---|---|
| விளக்கெண்ணெய் | – | 2 படி (2.6 லிட்) |
| கற்றாழைச்சாறு | )( | |
| பொன்னாங்காணிச்சாறு | )( | |
| பொடுதலைச்சாறு | )( | |
| பூண்டுச்சாறு | )( | |
| கொத்தமல்லிச்சாறு | )( | வகைக்கு |
| அகத்திக்கீரைச்சாறு | )( | ½ படி ( 650 மி.லி) |
| வல்லாரைச்சாறு | )( | |
| கோவையிலைச்சாறு | )( | |
| இளநீர் | )( | |

சேர்த்து அடுப்பேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிகட்டவும். பின் ஓமத்தின் பொடி, கோரோசனை 1 கழஞ்சு ( 4.4 கிராம் ) பொடி செய்து போடவும். தேக்கரண்டி உட்கொள்ளவும். வெட்டைநோய் தீரும்.

--------

## நோய் - மருந்து அகரவரிசை

பக்க எண்


| | | |
|---|---|---|
| அக்கிக்கு மருந்து | - | 58 |
| அண்டவாதம் தீர | - | 45 |
| அதிசாரக் காய்ச்சலுக்குக் குளிகை | - | 2 |
| அமிர்தாமலகத்தைலம் | - | 37 |
| அரையாப்பு தீர | - | 58 |
| அரையாப்புக் கட்டி தீர | - | 61 |
| ஆறாத இரணம் தீர | - | 73 |
| ஆறாத மேக இரணம் தீர | - | 60 |
| இசிவு சன்னி தீர | - | 57 |
| இஞ்சி இலேகியம் | - | 6 |
| இஞ்சிக் கசாயம் | - | 56 |
| இரச வீரியத்தால் வாய் வெந்தால் | - | 25 |
| இரணக் களிம்பு | - | 85 |
| இரணக் களிம்பு (வேறு) | - | 85, 86 |
| இரத்தக்கடுப்பு, இரைச்சல் தீர (வேறு) | - | 72 |
| இரத்தகாசம் தீர | - | 51 |
| இரத்தபேதி தீர | - | 48 |
| இராப்பேதி மாத்திரை | - | 15 |
| இருமல் ஈளை தீர இலேகியம் | - | 14 |

| | | |
|---|---|---|
| இருமல் தீர | - | 46 |
| இருமல் தீர (வேறு) | - | 50 |
| இருமல் தீர இலேகியம் (வேறு) | - | 4 |
| இருமல் தீர இளகம் (வேறு) | - | 38 |
| இருமல் தீரச் சூரணம் | - | 81 |
| இருமல் தீரச் சூரணம் (வேறு) | - | 86 |
| உடல் வன்மையாக | - | 52 |
| உண்ணாக்கு வளர்ச்சி தீர | - | 62 |
| உதரவாயு தீர | - | 29 |
| உதிரச் சிக்கலுக்கு | - | 8 |
| உதிரச் சிக்கல் தீர | - | 87 |
| உதிர வாயு பெரும்பாடு தீர | - | 83 |
| உறக்கம் வராதவர்களுக்கு | - | 53 |
| உஷ்ணவாயு தீர | - | 25 |
| எட்டு விதமான குன்மம் தீர | - | 70 |
| எலிக்கடி தீர | - | 52 |
| எல்லாவகையான வெப்பம் தீர | - | 69 |
| ஐந்து நிமிடத்தில் மலசலம் இறங்க | - | 18 |
| கக்குவான் தீர | - | 59 |
| கண் எரிச்சல் தீர | - | 49 |
| கண்ணோய் தொண்ணூற்றாறும் தீர | - | 64 |
| கண்புகைச்சல் தீர | - | 66 |
| கபத்திற்குக் கியாழம் | - | 19 |
| கர்ப்பம் உண்டாக | - | 56 |
| கர்ப்ப ஸ்திரீகளுக்கு மலசலம் போகக் குடிநீர் | - | 18 |

| | | |
|---|---|---|
| கல்லடைப்பு, நீர்க்கட்டுத் தீர | - | 55 |
| காக்கை வலிப்புத் தீர, நசியம் | - | 45 |
| காசம் தீர | - | 55 |
| காசநோய் தீர | - | 51 |
| காதிரைச்சல் தீர | - | 61 |
| காதில் கட்டி உடைய | - | 25 |
| காதில் சீழ் வடிவதற்கு | - | 54 |
| காதில் சீழ் வடிவது போக | - | 19 |
| காதுகுடைச்சல் தீர | - | 46 |
| காதுசெவிடு தீர | - | 27 |
| காதுநோவு தீர | - | 43 |
| காதுநோவு தீர (வேறு) | - | 46 |
| காமாலை தீர | - | 52 |
| கிராணி தீர | - | 74 |
| கிருமிகள் நீங்க | - | 69 |
| கிரிப்பூச்சி தீர மெழுகு | - | 33 |
| கீழாநெல்லித் தைலம் | - | 43 |
| கீல்வாயு தீர எண்ணெய் | - | 25 |
| குமரி இலேகியம் | - | 13 |
| குமரித் தைலம் | - | 8 |
| குழந்தைகளுக்கு செவ்வாப்பு தீர | | 49 |
| குழந்தையின் மலசலக்கட்டுக்கு | - | 59 |
| குன்மம் தீர | - | 34 |
| தன்மவாயு, வயிற்றுக்கட்டி தீர | - | 30 |
| கேசரஞ்சனத் தைலம் | - | 39 |

| | | |
|---|---|---|
| கை கால் எரிச்சல் தீர | - | 47 |
| சகல புண்ணும் தீர | - | 31 |
| சம்பிரத் தைலம் | - | 36 |
| சர்வாங்க வாதச்சூரணம் | - | 20 |
| சன்னிக்குச் சாறு | - | 77 |
| சன்னிக்கு மாத்திரை | - | 27 |
| சித்தர் ரகசியம் | - | 32 |
| சிரங்கு தீர | - | 36 |
| சிரங்கு தீர (வேறு) | - | 52 |
| சிவதை வேர் இலேகியம் | - | 7 |
| சீரகச் சூரணம் | - | 39 |
| சீரகத் தைலம் | - | 44 |
| சுகபேதிக் கஷாயம் | - | 21 |
| சுகபேதிச் சூரணம் | - | 2 |
| சுகபேதி மாத்திரை | - | 15 |
| சுரக்கஷாயம் | - | 22 |
| சுரம் தீர பற்பம் | - | 36 |
| சுரம் தீர மாத்திரை | - | 66 |
| சூதகக் கட்டு தீர | - | 76 |
| சூதகக் கட்டு, பெரும்பாடு தீர | - | 76 |
| சூதகவலி தீர | - | 79 |
| சூதகவாயு தீரக் கஷாயம் | - | 33 |
| சூதகவாயு, வயிற்றுவலி, குன்மவலிக்கு மருந்து | - | 71 |
| சூதகவாயு, வயிற்றுவலி, குன்மவலிக்கு மருந்து (வேறு) | - | 71 |
| செவிடு தீர | - | 74 |

| | | |
|---|---|---|
| சொட்டுநீர் தீர | - | 57 |
| சொறி, சிரங்கு பட்சவாதம் தீர | - | 63 |
| சொறி, சிரங்கு, நமைச்சல் தீர | - | 42 |
| தலைச்சுண்டு தீர | - | 38 |
| தலைப் பொடுகுக்கு | - | 42 |
| தலைவலி தீர | - | 84 |
| தலைவலிக்குப் பற்று | - | 60 |
| தாது பெருக | - | 81 |
| தாது பெருக (வேறு) | - | 82 |
| தாதுபெருக (வேறு) | - | 83 |
| தாது விருத்தி அல்வா | - | 24 |
| தாய்ப்பால் சுரக்க | - | 50 |
| தித்திப்புக் களிம்பு | - | 69 |
| திமிர் குட்டம் தீர | - | 50 |
| தீராத குன்மம் தீர | - | 70 |
| தீரா சுரம் தீர | - | 67 |
| தீரா சுரம் தீர (வேறு) | - | 67 |
| தீராத வெட்டை தீர | - | 18 |
| துவரெண்ணெய் | - | 85 |
| தெற்கத்திகணைக்கு எண்ணெய் | - | 75 |
| நசியம் | - | 10 |
| நரம்புச் சிலந்தி தீர | - | 44 |
| நரம்பு சிலந்தி தீர (வேறு) | - | 62 |
| நரைமயிர் மாற | - | 40 |
| நளிர் காய்ச்சல் தீர | - | 48 |

| | | |
|---|---|---|
| நளிர் காய்ச்சல், நடுக்கல் காய்ச்சலுக்கு | - | 1 |
| நன்னாரி சூரணம் | - | 41 |
| நா வறட்சிக்கு மருந்து | - | 28 |
| நிணத்திற்கும், கரப்பானுக்கும் மருந்து | - | 26 |
| நீடித்த நீரடைப்புத் தீர | - | 73 |
| நீரடைப்பு தீர | - | 53 |
| நீரிழிவுக்கு | - | 74 |
| நீரிழிவுக்கு மருந்து | - | 72 |
| நீரிழிவு தீர | - | 73 |
| நீரிழிவு தீர (வேறு) | - | 80 |
| நீர் இறங்க | - | 34 |
| நீர்க்கடுப்பு தீர | - | 78 |
| நீர்க்கட்டு, கல்லடைப்பு உடன்தீர | - | 64 |
| நீர்க்கட்டுக்கு | - | 54 |
| நீர்க்கட்டு தீர | - | 50 |
| நீர்க்கட்டு, நீர்ச்சுருக்கு தீர | - | 77 |
| நீர்க்கட்டு ஏற்பட | - | 54 |
| நீர்ச்சுருக்கு தீர | - | 76 |
| நெல்லிக்காய் தைலம் | - | 87 |
| நெறிக்கட்டி சுரம் போக்கக் கியாழம் | - | 23 |
| பஞ்ச தீபாக்கினி இலேகியம் | - | 5 |
| படைக்குக் குழம்பு | - | 8 |
| பல் ஈறு இரத்தம், வீக்கத்திற்கு | - | 79 |
| பல்கிட்டிய சன்னி தீர | - | 49 |
| பல்வலிக்கு | - | 59 |

பல்வலி தீர - 49
பல்வலி தீரப் பற்பொடி - 62
பல் நோவு தீர - 25
படர்தாமரை தீர - 25
பல்லுறுதிக்கு - 43
பவுத்திரம் தீர - 62
பாண்டு காமாலை தீர - 79
பித்த குன்மம் தீர - 31
பித்த மண்டைக் குடைச்சல் தீர - 47
பித்த மயக்கம் மாற - 54
பித்தம் தீர - 51
பிளவை - 62
பிள்ளை உண்டாக - 40
பிள்ளைகளுக்கு, கக்குவான், இரைப்பு தீர - 65
பிள்ளை பெறாமல் உள்ளவர்களுக்கு - 35
பீனிசத்திற்கு - 57
பீனிசம் தீர - 60
பீனிசத் தைலம் - 9
பீனிசம் தீரத் திரி - 78
பீனிசம் தீரத் தைலம் - 78
புண் தீர - 58
புண்கள் தீர - 28
புழுவெட்டு தீர - 21
பூ விழுந்த கண்ணுக்கு - 47
பெண் பூப்படைய - 63

| | | |
|---|---|---|
| பெரும்பாடு தீர | - | 53 |
| பெருமுத்திரம் தீர | - | 55 |
| பேதிகட்ட மாத்திரை | - | 28 |
| பேதிக்கு | - | 65 |
| பேதிக்குச் சூரணம் | - | 66 |
| பேதி மாத்திரை | - | 17 |
| பேன் சாக | - | 35 |
| பைத்தியம் தீர | - | 68 |
| பொடுதலைத் தைலம் | - | 16 |
| பொதுக் கடிக்கு | - | 59 |
| பொன்னாங்காணித் தைலம் | - | 10 |
| பொன்னாங்காணித் தைலம் (வேறு) | - | 11 |
| பொன்னாங்காணித் தைலம் (வேறு) | - | 12 |
| மகோதரம் தீர | - | 29 |
| மஞ்சள் காமாலை தீர | - | 75 |
| மஞ்சள் காமாலை போக | - | 53 |
| மஞ்சள் வெள்ளை தீர | - | 48 |
| மருந்தால் வந்த சீதபேதி போகக் குடிநீர் | - | 35 |
| மாதவிடாய் வர | - | 46 |
| மாந்தைக்கு | - | 45 |
| மார்புநோவு தீர உருண்டை | - | 29 |
| மார்பு வலி தீர | - | 51 |
| மாலைக்கண் தீர | - | 34 |
| மாலைக்கண் தீர (வேறு) | - | 40 |
| முகப்பருவுக்கு | - | 4 |

| | | |
|---|---|---|
| முறைச் சுரம் தீர | - | 67 |
| முறைச் சுரம் தீரக் கஷாயம் | - | 66 |
| மூக்கில் இரத்தம் வருவது தீர | - | 31 |
| மூக்குப்புண் தீர | - | 61 |
| மூச்சடைப்புத் தீர | - | 60 |
| மூலத்திற்கு மருந்து | - | 17 |
| மூலம் தீர | - | 48 |
| மூலம், கருப்பை நழுவாமல் இருக்க இலேகியம் | - | 19 |
| மூலநோய் தீர | - | 21 |
| மேக சிந்தாமணி மெழுகு | - | 12 |
| மேகம் தீர | - | 54 |
| மேகம் தீர (வேறு) | - | 77 |
| மேனிச் சூரணம் | - | 40 |
| வச்சிரவல்லி சூரணம் | - | 33 |
| வசீகர பூபதி இலேகியம் | - | 24 |
| வயிறு உப்பிசத்திற்கு மருந்து | - | 71 |
| வயிறு பேதி ஆக | - | 68 |
| வயிற்றுப்பிடுங்கல் தீர | - | 44 |
| வறட்டு சூலை தீர | - | 49 |
| வாதரோகம் போகப் பற்று | - | 16 |
| வாந்தி நிற்க | - | 68 |
| வாந்தி நிற்க (வேறு) | - | 69 |
| வாந்திபேதி தீர | - | 23 |
| வாயு, பெருவயிறு தீர | - | 30 |
| விக்கல் தீர | - | 45 |

| | | |
|---|---|---|
| விடபேதியில் வாந்தி கண்டால் | - | 64 |
| விரைவாதம் தீர | - | 83 |
| வீட்டுதூரமாகாதவர்களுக்கு | - | 43 |
| வீரிய விருத்திக்கு | - | 35 |
| வெட்டை தீர | - | 69 |
| வெட்டை தீர (வேறு) | - | 89 |
| வெண் குட்டம் தீர | - | 63 |
| வெண் குட்டம் தீர (வேறு) | - | 72 |
| வெள்ளை தீர | - | 46 |
| வெள்ளை தீர (வேறு) | - | 46 |
| வெள்ளோக்காளம் தீர | - | 56 |


---------

## தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005

## அண்மைவெளியீடுகள்

| | |
|---|---|
| அறிவியல் களஞ்சியம் தொகுதி – 13 | 700.00 |
| பாரதிதாசனும் பொதுவுடைமைத் தத்துவமும், பாவேந்தரும் மொழிபெயர்ப்பும் | 30.00 |
| பழந்தமிழ்த் தொடரியல் வரலாற்று ஆய்வு | 70.00 |
| தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி – 5 | 150.00 |
| உயிர்வேதியியல் | 270.00 |
| குழந்தை நல மருத்துவம் தொகுதி – 1 | 210. 00 |
| குழந்தை நல மருத்துவம் தொகுதி – 2 | 170. 00 |
| சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் தொகுதி – 2 (மறுபதிப்பு) | 400.00 |
| வாழ்வியல் களஞ்சியம் தொகுதிகள் 5 – 9 (மறுபதிப்பு) ஒவ்வொன்றும் | 700.00 |
| அருங்கலைச் சொல் அகர முதலி (மீள்பதிப்பு) | 600.00 |
| திருமுறைத் திருநெறி தொகுதி – 1 | 105.00 |
| தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி–2 | 85.00 |
| வைத்திய சிந்தாமணி | 80.00 |
| அயல்நாட்டவர்க்குத் தமிழ் – கருத்துப் பரிமாற்ற இலக்கணம் | 70.00 |
| சுந்தரர் தேவாரப் பாடல்களில் இசை | 70.00 |
| தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி – 1 (மறுபதிப்பு) | 200.00 |
| உலகநாடுகளில் தமிழ்ப் பண்பாடு | 50.00 |
| 108 ஆடலியக்கத் தமிழ்ப் பெயரீடும் அமைவுகளும் | 50.00 |
| தமிழக அறிவியல் வரலாறு | 60.00 |
| இசைத் தமிழ்ப் பேரறிஞர்கள் தொகுதி – 1 | 60.00 |
| தன்வந்தரி வைத்தியக் கும்மி | 50.00 |

தொடர்பு முகவரி :

**இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை**

**தமிழ்ப் பல்கலைக்கழகம், (அரண்மனை வளாகம்)**

**தஞ்சாவூர் – 613 001. தொ.பே. 04362 – 239221**

T158

R005G